ஓம் :

# தமிழர் யார்?

(ஒரு சிறு ஆராய்ச்சி நூல்)

ஆசிரியர் :

நாரண - துரைக்கண்ணன்

சக்தி பிரசுராலயம்

இராபர்ட்ஸன்பேட்டை

மயிலாப்பூர், சென்னை

1939

காப்பிரைட்.] [விலை அணா நான்கு

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | தந்துரை .... .... .... | iii |
| | தாள் பூட்டு இல்லாத தமிழ் நாடு (பாட்டு) .... .... .... | vi |
| 1. | இன்றைய முக்கிய பிரச்சினை .... | 1 |
| 2. | ஸர். பன்னீர்செல்வத்தின் கூற்று .... | 4 |
| 3. | பொருத்தமற்ற வாதம் .... .... | 20 |
| 4. | தமிழர் யார்?.... .... .... | 30 |
| 5. | ஆரியர்-தமிழர் .... .... | 43 |
| 6. | தற்காலத் தமிழ் மக்கள்.... .... | 49 |
| 7. | தமிழ் நாடு எது? .... .... | 52 |
| 8. | பிராம்மணர் தமிழரா? .... ... | 55 |
| 9. | தமிழர் இந்தியரா? .... .... | 72 |
| 10. | நமது கடமை என்ன? .... .... | 97 |


முதற் பதிப்பு 14—1—39

# தந்துரை

"ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!"
—அப்பர் தேவாரம்

'தமிழர் யார்?' என்ற பிரச்சினையை ஸர். பன்னீர்செல்வம் சென்ற டிசம்பர் மாதக் கடைசி வாரத்தில் வேலூரில் நடைபெற்ற சென்னை மாகிலத் தமிழர் மாநாட்டில் கிளப்பினார். அவர் தமது தலைமைப் பேருரையில் தமக்குப் புலப்பட்ட ஆராய்ச்சி உண்மைகளாக வெளியிட்ட சில கருத்துக்கள் மிக விபரீதமாகக் காணப்பட்டன; அத்துடன், அவர் ஆரியர்-தமிழர் என்ற பழங் கதையைக் கொண்டுவந்து பேசியிருக்கும் போக்கைப் பார்த்தால், அவை தமிழ் நாட்டைப் பிளவுபடுத்திப் பாழாக்குவதற்கு ஏதுவாகுமோ என அஞ்சவேண்டிய விதமாயிருக்கிறது.

ஸர். பன்னீர்செல்வம் தலைமைப் பேருரையை நான் படிக்க நேர்ந்தபோது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சியின் உத்வேகமே இச்சிறு நூலாக உருக்கொண்டிருக்கிறது என்று கூறலாம்.

நான் இச் சிறு நூலில் எழுதியுள்ள அபிப்பிராயங்களே சரியானவை என நிறுவ முன்

வரவில்லை. தமிழர் யார்? என்ற எனது இச்சிறு ஆராய்ச்சியில் தமிழர் சம்பந்தமான வரலாற்றை யெல்லாம் ஆராய்ந்து கூறிவிட்டேன் என்றும் யாரும்எண்ணலாகாது. இதுஒரு சிறு முயற்சியே யாகும். தமிழ் நாட்டில் ஏற்கனவே புகுந்துள்ள வேற்றுமைகள் போதாவென்று ஆரியர்—தமிழர் என்ற அர்த்தமற்ற வேற்றுமை வேறு புதிதாக இடங்கொண்டு தமிழ் நாட்டைப் பல கூறுகளாக்கிப் பாழ்ப்படுத்தாதிருக்க வேண்டுமென்ற ஒரு பெரும் நோக்கோடேயே இச் சிறு நூலை எழுத முற்பட்டேனாதலால், கருத்து வேற்றுமைக்கு மதிப்பு கொடுத்து, நல்லனவென்றும், உண்மையென்றும் தோன்றுவனவற்றை மட்டும் ஏற்றுக் கொண்டு, அல்லனவற்றைப் பெரிதாகப் ப்பாராட்டாதிருக்கும்படியும் காய்தல் உவத்தல் இன்றி இதை முற்றும் படித்துப் பின்னர் இது பொருந்தும்; இது பொருந்தாதெனக் கூறும்படியும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இச் சிறு நூல் வாயிலாக, நமது தமிழ் நாட்டில் தற்போது பரவியுள்ள தப்பபிப்பிராயங்களும், வேற்றுமையுணர்ச்சிகளும் நீங்கிப் பரந்த நோக்கமும் விரிந்த மனப்பான்மையும் ஒற்றுமை ஓரளவாயினும் ஏற்படுமானால், அதுவே எனது சிரமத்துக்கு ஆறுதலாக இருக்கும்.

தமிழர் வரலாறு இதுவரை செவ்வையாக வெளிவரவில்லை. ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் தமிழ்நாட்டு வரலாற்றைக்கொண்டும், அதற்கு ஆதாரமாக அவ்வப்போது கிடைக்கும் சிலா

சாஸனம், கல்வெட்டு ஆராய்ச்சிகளைக் கொண்டுமே ஒருவாறு தமிழர் வரலாற்றை அறியமுடிகிறது. ஆகவே, அவற்றையெல்லாம் ஆழ்ந்து ஆராய்ச்சிசெய்து பின்னர் 'தமிழர் வரலாறு' என்ற பெயரோடு ஒரு நூல் இயற்றலாமென்று எண்ணி யிருக்கிறேன்.

நமது தமிழ் முன்னோர்களின் நாகரிகம், கலை, காதல் வாழ்வு முதலியவைகளைப்பற்றிப் பல கட்டுரைகள் அவ்வப்போது 'கலா நிலையம்' முதலிய இலக்கியப் பத்திரிகைகளில் புனை பெயரோடு எழுதியிருக்கிறேன். 1933ம் வருஷத்தில் 'பிரசண்ட விகடன்' என்னும் உயரிய ஹாஸ்யப் பத்திரிகையில் 'திருக்கோவையார்' என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு, தொல்காப்பியப் பொருளதிகாரம், இறையனு ரகப்பொருள் முதலிய நூல்களைத் தழுவி 'பழந் தமிழர் காதல் வாழ்வு' என்ற தலைப்பில் தொடர்ச்சியாக எழுதியிருக்கிறேன். கூடியசீக்கிரம் அதை நூல் வடிவாக வெளியிடத் தீர்மானித்திருக்கிறேன்.

தேசீய கவி நாமக்கல்-திரு. இராமலிங்கம் பிள்ளை இராமநாதபுரம் தமிழ் மாகாண மகாநாட்டின்போது பாடிய ஒரு பாடல் எனது கருத்துக்கு அரண் செய்யும் வகையில் இருப்பதால், அதை இந்நூலில் சேர்த்திருக்கிறேன். அன்பர்கள் பாடி மகிழ்வார்களாக.

சக்தி நிலையம், மயிலாப்பூர்
வெகுதானிய ஆண்டு
தைத் திங்கள்

ஆசிரியன்.

# தாள் பூட்டு இல்லாத தமிழ்நாடு

[நாமக்கல். திரு. வே. ராமலிங்கம் பிள்ளை]

---

## விருத்தம்

(1)

வலைவீச ஆசைதரும் அலைவீசும்
வயலும் மற்ற வளங்களாலே
விலைவாசிக் கவலையின்றி விருந்தோம்ப
எதிர்பார்க்கும் விருப்பத் தாலே
திருவாசல் கதவினுக்குத் தாள்பூட்டு
இல்லாத தமிழ் நாடென்று
பலதேசம் சுற்றிவந்த மகஸ்தனிசும்
புகழ்ந்துரைத்த பழைய நாடு.

(2)

பற்றொழித்த பெரியவரே பகுந்துரைக்கும்
அரசமுறைப் பணிந்து போற்றி
கற்றறிந்த அரசர்களே காவல்செய்த
சரித்திரமே காணும் நாடு.
மற்றெரிந்த வீரனென்று மமதையுள்ள
மன்னவரை மதிக்கா நாடு.
சற்றொருவர் வருந்திடினும் தாம்வருந்தும்
அரசாண்ட தமிழர் நாடு.

(3)

வேங்கடமும் குமரியிடை விரிகடல்சூழ்
நிலப்பரப்பை வேருய் ஆண்டு
வாங்குகிற வரிப்பணத்தின் வரையறுக்க
அரசுமுறை வகுத்த தல்லால்
ஈங்குவட இமயம்வரை இந்தியரின்
நாகரிகம் ஒன்றே யாகும்.
**தாங்கள் ஒரு தனியென்று தடைபோட்டுத்**
**தருக்கினவர் தமிழர் அல்ல.**

(4)

விசைச்செல்வம் உலகநடை வெவ்வேறு
நாடுகளில் விரியும் ஞானம்
**பசைச்சொல்லும் பலபாஷை அறிவெல்லாம்**
**தமிழ்மொழியில் பலக்க வென்றே**
**திசைச்சொல்லுக் கென்றுதனி இடங்கொடுத்தார்**
**இலக்கணத்தில் தெரிந்த முன்னேர்**
**இசைச்சொல்ல இதைப்போல வேறு மொழிக்**
**கிலக்கணநூல் எங்கே காட்டு !**

(5)

எந்தமொழி வந்திடினும் தமிழ்மொழியை
என்னசெய்யும் என்றே முன்னேர்
வந்தபிற மொழியையெல்லாம் வரவேற்றுத்
தமிழ்மொழியை வளரச் செய்தார்.
செந்தமிழின் சரித்திரத்தைத் தெரியாமல்
மக்களுக்குத் திரித்துக் கூறி
இந்திமொழி வந்ததென்று இகழ்ந்துரைப்போர்
தமிழ்நாட்டின் பெருமை எண்ணர்.

(6)

பூச்சிபுழு உயிர்களையுஞ் சமமென்று
போற்றினவர் தமிழ ராவார்.
பேச்சிலுள்ள வேற்றுமைக்கு மனிதர்களைப்
பிரித்துவிடத் தமிழர் பேசார்.
ஏச்சிலொரு இன்பமுள்ளார் எக்காலும்
தமிழர்களின் இனத்தைச் சேரார்.
கூச்சலிட்டு வசையுரைப்போர் கொச்சைகளே
இதற்குநல்ல சாட்சி கூறும்?

(7)

வேறெவரும் நுழையாமல் வேலியிட்டுத்
தமிழ்நாட்டார் வாழ்ந்த தில்லை
கூறுபடும் பலநாட்டார் கூடித்தங்கிக்
குலவியதித் தமிழ் நாடன்றோ!
மாறுபடும் பலமதமும் மருவிமனம்
கலந்ததெங்கள் தமிழின் மாண்பு
தேறிமனம் தெளிவடைவோம் தமிழர்களின்
பெருங்குணத்தை தெய்வம் காக்கும்.

---

# தமிழர் யார்?

## 1. இன்றைய முக்கிய பிரச்சினை

சர்வதேச அரசியல் வானில் அடிக்கடி இருள் படர்ந்து உலகையே கவ்விக்கொள்ளுகிறது. பாஸிஸ வெறி பிடித்த சர்வாதிகாரிகள் அவ்வப்போது நாடாசை மேலீட்டால் நாக்கு தடித்துப் பேசும் வெறி பேச்சுகளாகிய மின்னல்கள் மக்கள் உள்ளக் கண்களைப் பறிக்கக்கூடியனவாயிருக்கின்றன. யுத்த மேகங்களோ தோன்றித் தோன்றிக் கலைகின்றன. சில சமயம் அவை வேகமாகக்கூட சஞ்சரிக்க ஆரம்பித்து விடுகின்றன. அடுத்த கணம் எங்கு பீரங்கி வெடிகுண்டுகளாகிய இடி இடித்து மகா யுத்தமாகிய மழை பெய்ய ஆரம்பித்துவிடுமோ என உலக மக்கள் அஞ்சக்கூடிய நிலைமைகூட ஏற்பட்டுவிடுகிறது. ஆனால், வல்லரசுகளின் கோழைத்தனமான நிலைமையால் ஏற்படும் சிறுசிறு சமாதான உடன்படிக்கைகளாகிய காற்று வீசி யுத்த மேகங்களைக் கலைத்துவிடுகிறது.

நம் நாடோ விடுதலைக்காகப் போராடிக் கொண்டு வருகிறது. மகாத்மா, ஜவஹர், சுபாஷ் போன்ற மாபெருந் தலைவர்கள் பாரத நாட்டு விடுதலைப் போரின் முன்னணியிலிருந்து தீவிரமாக வேலை செய்து வருகின்றனர். அப்போருக்கு அரண் செய்யும் வகையிலேயே காங்கிரஸ்காரர்கள் தற்போது மாகாண சுயாட்சியை மேற்கொண்டு பல மாகாணங்களில் மந்திரி பதவியேற்று, ஜனங்களுக்குக் கூடுமானவரை பல நன்மைகளைப் புரிந்து, சுதந்திரப் போருக்குப் பலந் தேடி வருகின்றனர். இங்கிலையில் பிரிட்டிஷ் சர்க்கார் யாரும் வேண்டா சமஷ்டி அரசியலை நம் தலையில் சுமத்த முயன்று சமயம் பார்த்து வருகின்றனர். இத்தகைய சமஷ்டியை எவ்விதமாகத் தகர்த் தெறிவது என்று தலைவர்கள் யோசித்து திட்டம்போட்டு வருகின்றனர்.

இவ்விதம் நம் நாட்டு மக்கள் முன்னிலையில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இம் முக்கிய பிரச்சினைக ளுள்ளும் மிக முக்கியமாக உள்ள பெரிய பிரச்சினை என்னவென்றால், பூரண சுயராஜ்யத்தைப் பெறுவதற்குரிய போராட்டத்தை எவ்விதம் நடத்தி வெற்றி பெறுவதென்பதே! ஏனென்றால், அந்தச் சுயராஜ்யந்தான் நம் பாரத

தேசத்திலுள்ள ஏழை முதல் பணக்காரன்வரை யுள்ள எல்லா மக்களுடைய குறைகளையும் தீர்த்து விமோசன மளிக்க வல்லது. நம் மக்களுக்கு இப் போது வேண்டுவன வெல்லாம் வயிருர உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடுமே யாகும். மனிதன் வாழ்நாளில் அத்தியாவசிய மாக வேண்டியுள்ள இத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எவ்விதமான முறைகளைக் கையாள் வது என்ற லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டே ஒவ்வொரு இயக்கமும் கட்சியும் வேலை செய்து வருகின்றன.

இங்ஙனம் மனிதன் வயிற்றுப்பாட்டுக்கு வழி செய்ய போராடிக்கொண்டு வருகையில், அவன் 'நான் யார்? என்னுடன் இருப்பவன் யார்? அவன் என்னைச் சேர்ந்தவனு? அல்லது அன்னி யனு? அவன் என்னைப்போல் தமிழனு? திரா விடனு? அல்லது ஆரியனு? அவன் தேகத்தில் ஓடுவது தமிழ் ரத்தமா? ஆரிய ரத்தமா?' என்ற ஆராய்ச்சியில் இறங்கி இரத்தப் பரீட்சை செய்ய அவனுக்கு அவகாச மேது? ஆனுல், இன்று நம் தமிழ் நாட்டில் ஒரு சிலர் இவ்வித அர்த்தமற்ற ஆராய்ச்சியில் இறங்கி, வகுப்புத் துவேஷப் பிர சாரஞ் செய்யத் தொடங்கி யிருக்கின்றனர்.

## 2. ஸர். பன்னீர்செல்வத்தின் கூற்று

இவ்வித விஷமக் கிளர்ச்சி எவ்விதம் ஏற்பட்டது? இதற்கு அடிப்படையான காரணமென்ன? தற்போது நம் மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டு ஆட்சி செலுத்தி வருவதே இவற்றிற்கெல்லாம் காரண மென்றால் மிகைப் படுத்திக் கூறியதாகாது. நம் மாகாண அரசியல் சரித்திரத்தைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்கு நாம் கூறுவது உண்மையென்று நன்கு விளங்கும். 1920-ம் வருஷத்தில் மாண்டேகு-செம்ஸ்போர்டு அரசியல் சீர்திருத்தம் அமுலுக்கு வந்த காலத்தும், நம் மாகாணத்தில் பிராம்மணர்—பிராம்மணரல்லாதார் கிளர்ச்சி ஏற்பட்டதை வாசகர்கள் நினைவுக்குக் கொண்டு வரவேண்டும். அதுபோலவே, புதிய அரசியல் சீர்திருத்தம் அமுலுக்கு வந்திருக்கும் இக்காலத்திலும், ஆரியர்—தமிழர் கிளர்ச்சி கிளம்பி யிருக்கிறது.

இவ்வித விஷமப் பிரசாரத்தை நம் மக்களிடை பரப்பி நம் தேசத்தைப் பாழாக்குந் திருத்தொண்டை மேற்கொண்டிருப்பவர்களில் பெரியார் ஈ. வே. ரா., ஸர். பன்னீர்செல்வம் ஆகியோர்

முன்னணியில் நிற்கின்றனர். அவர்கள் முதலில் கட்டாய இந்தி வேண்டாமென்று கூறி எதிர்க்கும் முறையில், "இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!" என்ற சுலோகத்தை ஆரம்பித்து, பின்னர், "தமிழ் நாடு தமிழர்க்கே" என்ற நாமாவளியையும் பாடலாயினர். கடைசியாக இப்போது, "தமிழர் யார்?" என்ற பிரச்சினையில் இறங்கியிருக்கின்றனர். இது உண்மையிலேயே பெரிய பிரச்சினையேயாகும். ஸ்ரீ. ஈ. வே. ரா. கோஷ்டியார் நினைப்பதுபோல இப் பிரச்சினையை அவ்வளவு எளிதில் ஆராய்ச்சி செய்து தீர்த்துவிட முடியாது. ஆனால், ஸர். பன்னீர்செல்வம் வேலூரில் 1938ல் டிசம்பர் மாதக் கடைசியில் நடந்த சென்னை மாநிலத் தமிழர் மாநாட்டில் தலைமை வகித்து ஆற்றிய தலைமைப் பேருரையில் 'தமிழர் யார்?' என்ற பிரச்சினையைக் கிளப்பி, அலசி ஆராய்ந்து வெகு சுலபமாக, "தமிழர் இன்னார்" என்று முடிவு கட்டிவிட்டார். அவ்விசித்திர முடிவை அவரது வாய்மொழி வாயிலாகவே வாசகர்கள் அறிவதற்காக, தலைமைப் பேருரையை அப்படியே கீழே தருகிறோம்.

"இம் மாநாட்டை மாகாண தமிழர் மாநாடென்று குறித்திருப்பதால் தமிழர் என்னும் பதத்

தின் உண்மைப் பொருளை நாம் சரியாக அறி கிறோமா வென்று சற்று சந்தேகத்திற்கு இடந் தருகிறது. என் மனதிற்குப் பட்ட வரையில் தமிழன் என்கிற பதத்திற்கு ஓர் அர்த்தமே பொருத்தமானது. **யார் ஒருவர் தொன்று தொட்டு தலைமுறைத் தத்துவமாக தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு அம்மொழியைப் பிரதான மாக அனுஷ்டித்துப் போற்றி வருவாரோ அவரே தமிழர் ஆவரேயன்றி, மற்றொருவருக்கும் அப்பதம் பொருத்தமாகாது.** அன்னிய நாட்டினர் தமிழ் மொழியில் பெரும் ஆராய்ச்சி செய்து, தேர்ச்சி பெற்று புலமைத்தன்மை அடைந்திருப்பினும், தமிழ் மொழிக்கு என்ன அரும் பெருந் தொண்டு புரிந்திருப்பினும் அவர் தமிழர் ஆகமாட்டார்.

## தமிழர் யார்?

நம் நாட்டில் வீரமாமுனிவர் என்று போற் றப்பட்ட மதுரை சேசு சபையைச் சேர்ந்த பெஸ்கி சுவாமியாரும், ஆங்கில பாதிரியாராகிய போப்பையரும் நமது மொழியில் மிகவும் புலமை அடைந்தவர்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயம். வீரமாமுனிவர் இயற்றிய தேம்பா வணியும், போப்பையரின் தமிழ் இலக்கணமும்

மிகவும் பெருமை வாய்ந்த தமிழ் நூல்களாக இன்றும் மதிக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் வீரமாமுனிவராவது போப்பையராவது தமிழரென்று கருதப்படுவார்களா? அவ்வாறே வெளிநாட்டிலிருந்து நம்மிடத்தில் குடியேறுகிறவர்கள் எவ்வளவு காலங்களுக்கு முன் நம்மிடம் வந்து சேர்ந்தவர்களாயினும் இந்நாட்டிலேயே எப்போதும் இருக்கும் நோக்கத்துடன் உள்ளவர்களாயினும் நம் தமிழ் மொழியை தம் மொழியாகக் கொள்ளாமலிருப்பின் அவர்கள் தமிழர்கள் ஆக மாட்டார்கள். அவசிய நிமித்தமும் தன் சௌகரியத்தை உத்தேசித்தும் நம் மொழியைப் பழக்க வழக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு காரணத்தைக் கொண்டு மாத்திரம் தமிழராகமாட்டார்கள்.

## பார்ப்பனர் தமிழரா?

குறிப்பாக நம் நாட்டிலுள்ள பார்ப்பனர்கள் தமிழர் ஆவார்களா? ஆகமாட்டார் என்பது தான் என் முடிவு. நம் நாட்டில் அனேக நூற்றாண்டுகளாக இருந்திருந்தும் நம்முடன் கலவாமல் தங்களை ஒரு தனிப்பட்ட வகுப்பினராகவே வைத்துக்கொண்டது மாத்திர மல்லாமல், தாங்

களே ஏனையோரைவிட மேல் வகுப்பினர் என்று சொல்லிக்கொண்டு தம் சொந்த மொழி வட மொழியாகிய சமஸ்கிருதமே என்றும், அம் மொழி நம் பொது மொழியாகிய தமிழ் மொழியைவிட மேன்மைப்பட்ட தென்றும், அது ஒரு தெய்வீக மொழியென்றும் அம்மொழியே கடவுள் வணக்கத்திற்கும், மற்றுமுள்ள அவர்க ளுடைய சடங்குகளுக்கும் பொருத்தமான தென்றும், தமிழ் மொழி இக் காரியங்களுக்குப் பொருத்தமற்றதென்றும் அதை இழிவுபடுத்திப் பேசுபவர்கள் எவ்விதத்தில் தமிழரென்று அழைக்கப்பட பொருத்த முள்ளவர்களென்று எனக்கு விளங்கவில்லை. ஆகவே, பார்ப்பனர்கள் தமிழர் ஆகமாட்டார்க ளென்று சொல்லுவது மிகையாகாது.

## தமிழ் நாடு எது?

மேலும் தமிழ் நாடு என்பது எந்த நாடென்று நிர்ணயிப்பதற்கு ஆராய்ச்சி வேண்டியதில்லை. சென்னை நகரிலிருந்து குமரி வரையில் மலையாளத் திற்குக் கிழக்கே உள்ள நாடே தற்காலத்தில் தமிழ் நாடென்று சந்தேகத்திற் கிடமில்லாமல் கூறலாம்.

நாம் இந்த நாட்டிற்கு இப்போது இந்திய மா கடலில் மூழ்கிக் கிடக்கும் ஓரிடத்திலிருந்து வடக்கே வந்தோமா? அல்லது ஆரியர்கள் வருவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக மத்திய ஆசியாவில் இருந்து தெற்கே வந்தோமா என்ற விஷயம் சரித்திர ஆராய்ச்சிக்காரர் நிர்ணயிக்கவேண்டிய காரியம்.

## தமிழர் எவருக்கும் அடிமைப்பட்டவரல்லர்

ஆனால், பல்லாயிர ஆண்டுகளாக இந்நாட்டிலேயே நாம் வாழ்ந்து வந்திருக்கிறதும், இந்நாடே நம் நாடென்பதும், இந்நாட்டு மக்கள் நாமேயென்பதும் யாரும் மறுக்க முடியாத விடயம். வட இந்தியாவில் பல்வேறு மக்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து ஒவ்வொருவரையும் பின் வருபவர் அடக்கி ஒருவர் ஒரு காலத்திலும் மற்றொருவர் வேறொரு காலத்திலும் ஆதிக்கம் புரிந்து வந்ததாகவும் சரித்திர மூலமாக அறிகிறோம். ஆனால் நாமும் நம்மைச் சார்ந்த மற்ற திராவிட வகுப்பினரும், ஒரு காலத்திலும் இந்த வடநாட்டு ஆதிக்கங்களில் ஒன்றிற்காவது நாம் உட்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன் சந்திரகுப்த

னென்னும் சக்கரவர்த்தியால் ஒரு புகழ் பெற்ற ஆட்சியை வடநாட்டில் ஸ்தாபிக்கப்பட்டதாகவும், அவருடைய பேரனுகிய அசோக சக்கரவர்த்தி காலத்தில் அவருடைய ஆட்சி ஏறக்குறைய இந்தியா முழுவதிலும், இன்னும் வெளிநாட்டிலும் பரவியிருந்ததாகவும் தெரிகிறது.

## வடநாட்டார் அந்நியரே

ஆனுல் அக்காலத்திலுங்கூட நம் நாட்டில் நம் மூவரசர்களாகிய சேர-சோழ-பாண்டிய மன்னர்களே அரசு புரிந்து வந்ததாகவும் தெரிகிறது. இதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு மகம்மதியர்கள் வட இந்தியாவில் புகுந்து தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி டில்லிமா நகரை தலைநகராகக்கொண்டு ஓர் பரவிய ஆட்சியை மொகலாய சக்கரவர்த்திகள் நடத்தி வந்திருக்கிருர்கள். அக்காலத்திலும் தென்னுட்டாராகிய நாம் அந்த ஆதிக்கத்திற்கு உட்படாமல் தனிப்பட்ட வகையிலேயே நம்முடைய காரியங்களை நடத்தி வந்திருக்கிறோம்.

ஆங்கில ஆட்சி நம் நாட்டில் நிலை பெற்ற பிறகே நாமும் வட நாட்டினரும் ஒரே ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கிறோமே யொழிய அதற்கு

முன் எந்தக் காலத்திலும் நமக்கும் வட நாட்டின ருக்கும் யாதொரு கலப்பு மிருந்ததாகத் தெரிய வில்லை. தற்காலத்திலும் தென்னாட்டு திராவிடர் களுக்கும் வட நாட்டார்க்கும் ஒற்றுமையையோ சம்பந்தத்தையோ காட்டக்கூடிய காரியம் ஒன்றே. அது எது வெனில், நாமிருவரும் ஒரே வெளி நாட்டு ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கிறதே யாகும். மற்றெல்லாக் காரியங்களிலும் நாம் வேறு, அவர்கள் வேறு வகுப்பினர்களாகவே காணப்படுகிறோம். மக்கள் பேசும் மொழியிலோ சாப்பிடும் உணவிலோ உடுக்கும் உடையிலோ மற்ற பழக்க வழக்கங்களிலோ நாம் வேறு அவர் கள் வேருகவே இருக்கிறோம். மேலும் பூர்வீக கலை நாகரீகம் இவ் விடயங்களைப்பற்றி விசாரிப் போமானல் வடநாட்டு ஆரியர்களுக்கும் ஐரோப் பிய ஆரியர்களுக்கும் வெளிப்படும் சம்பந்தங்கூட நம்மவருக்கும் வடநாட்டாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

## திராவிடர் இந்தியரா ?

இன்னும் ஆழ்ந்து பார்ப்போமானல் திராவிட மக்களாகிய நாம் இந்தியர்கள் அல்லவென்றே சொல்லவேண்டும். இந்தியர் என்று ஒரு பதம்

ஏற்படுவதற்கே காரணம் நம் நாட்டி லிருந்து ஆயிரம் மைல்களுக்கு மேற்பட்ட தூரத்திலுள்ள பாஞ்சால தேசத்தில் ஓடும் இந்தஸ் நதியே. அந்த நதியின் பெயர் இந்தஸ் என்று இருந்தபடியால் அதை அடுத்தாற்போல் உள்ள நாட்டிற்கு இந்தியாவென்றும் பெயர் வழங்கப்பட்டது. அந் நாட்டில் குடியேறியிருந்த மக்கள் கிழக்கே போகப் போக அந்தப் பெயரும் அவர்களுடனே நகர்ந்துசென்றது. ஆகவே, காலக்கிரமத்தில் விந்தியமலைத் தொடருக்கு வடக்கேயுள்ள நிலப்பிரிவு முழுவதிலும் இந்தப் பெயர் வழக்கத்தில் வந்தது. அம்மக்களின் ஆதிக்கத்தின் கீழ் ஒருகாலும் வராத நம் நாட்டிற்கு அது பொருத்தமாகாது. ஆயினும் 2000 ஆண்டுகளுக்கு முன் வட இந்தியாவின்மேல் படையெடுத்துவந்த அலெக்சாண்டர் பெருமான் என்னும் ஒரு தளகர்த்தனின் சரித்திரத்தை எழுதிய கிரேக்க சரித்திர ஆசிரியர்கள் வடநாட்டைப்பற்றி எழுதும்போது இந்தியாவென்று எழுதினமையால் இந்திய தேசம் இருக்கிற விஷயம் மேல்நாட்டார் அறிந்துகொள்ள வசதி ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள மேல் நாட்டார்கள் ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்குமுள்ள வித்தி

யாசங்களை அறியாமல் இமயமலைத் தொடருக்குத் தெற்கிலுள்ள நாடு முழுமைக்கும் இந்தியா வென்று ஒரு பொதுப் பெயரைக் கொடுத்து அப் பெயர் இப்போது நம் நாட்டிற்கும் வழங்கப் பட்டுவிட்டது.

## ஆரியக் கூட்டுறவால் வந்த வினை

இவ்விதம் இரு வகுப்பினரும் தனிப்பட்ட முறையில் வளர்ந்து வந்தபோதிலும் நாளடை வில் இரு வகை கலைகளுக்கும் மொழிகளுக்கும் தொடர்பு ஏற்பட்டு வடநாட்டு நாகரிகத்தாலும், வட மொழியாலும் நம் நாகரிகமும் நம் மொழி யும் சீர்குலைந்து போனதென்பது மறுக்க முடி யாத உண்மை. இவ்விதம் சீர்குலைந்தமைக்கு தனித் தமிழ் தேய்ந்து மற்ற திராவிட நாடுகளில் தெலுங்காகவும், கன்னடமாகவும், மலையாளமாக வும் இருந்து வருகிறதே போதிய சான்றாகும். நாம் பேசி வரும் தமிழே வட மொழியில் கலப் புற்று கெடுதலடைந்திருப்பதைத் தெற்றென விளக்கும்.

நாகரிகத்தைப் பார்ப்போமானால் சிறு வயதி லேயே பெண்களை மணம் செய்விப்பதும், ஆண் களை இழந்த பெண் மக்களை மறுமணமில்லாமல்

வைப்பதும், தீண்டாமைப் பேயை நாட்டில் ஆட விட்டிருப்பதும், நமக்குள்ளாகவே சாதி என்னும் பேரால் அனேக பிரிவுகளை ஏற்படுத்தி இருப்பதும் நமக்கு ஏற்பட்டிருக்கும் பெருஞ் சீர்கேட்டின் பல அடையாளங்களாகும்.

இவ்வுண்மைகளை நான் வற்புறுத்திச் சொல்வதன் நோக்கம் நாமும் நம்மைச் சார்ந்த மற்ற திராவிட மக்களும் பூர்வீகம் தொட்டு வடநாட்டாருக்கு வேறுபட்ட வகுப்பினர்; அவர்களுடன் நாம் கலந்து கொள்ளுவதனால் நமக்கு இடையூறுகள் ஏற்படுமே தவிர வேறில்லை. நம் நாடு ஒரு தனிப்பட்ட நாடு என்பதை நாமெல்லோரும் உணரவேண்டுமென்பதற்கே.

## நமது சுயராச்சியம் திராவிட ராச்சியமே

ஆகவே, நாம் சம்பந்தப்பட்ட வரையில் சுயராச்சியம் என்கிற வார்த்தைக்கு அர்த்தம் இருக்குமேயாகில் அந்த ராச்சியம் தமிழ் அல்லது திராவிட ராச்சியமாக இருக்கவேண்டும். ஆதிக்கத்தை நடத்துகிறவர்கள் திராவிடர்களாய் இருந்தால் மட்டுமே அது உண்மையில் சுயராச்சியம் ஆகும்.............

பல்லாயிர ஆண்டுகளாய் நமக்கென்று நம்

முன்னோர் பாதுகாத்து நம்மிடம் ஒப்படைத்திருக்கும் நமது பழைய மொழி, கலை, நாகரீகம், நம்முடைய தனிப்பட்ட வாழ்வு இவைகளைக் காப்பாற்றவே நாம் இப்போது அரசு புரிந்து வரும் மந்திரி சபையாருடன் போர் புரிந்து வருகிறோம்" என ஸர். பன்னீர்செல்வம் முடிவாகப் போர் முழக்கஞ் செய்திருக்கிறார்.

ஸர். பன்னீர்செல்வம் சாதாரண மனிதரல்லர். ஜஸ்டிஸ் கட்சியில் ஒரு முக்கியஸ்தராயிருந்து, தஞ்சை ஜில்லா போர்டுக்குத் தலைவரா யிருந்தவர். சென்னைச் சட்ட சபையில் அங்கம் வகித்து ஹோம் மெம்பராகவும் வேலை பார்த்தவர். அது மட்டுமா? காங்கிரஸ் பதவி யேற்பதற்குமுன் இடைக்காலத்தில் பினமி மந்திரிகளில் ஒருவரா யிருந்தவர். அப்பேர்ப்பட்ட ஒரு கனவான் ஒரு விஷயம் சொல்வதென்றால், அது சரியாகவோ, தப்பாகவோ, அல்லது உண்மையாகவோ, பொய் யாகவோ இருந்தாலும் எவ்வளவு தூரம் பாமர மக்கள் மனதைக் குழப்பும் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. ஏற்கனவே, வகுப்புத் துவேஷப் பிரசாரத்தால் நம் மக்களிடையே எவ்வித அலங்கோல நிலைமை ஏற்பட்டு வருகிறது என்று நாம் அனுபவத்தில் அறிந்த விஷயமேயாகும்.

பல பல சமயத்தினர், பல பல தேசத்தினர், பல பல மொழியாளர் நம் நாட்டில் குடியேறினும், நந் தமிழ் மக்கள் அவர்களை யெல்லாம் முக மலர்ந்து வரவேற்று இடந் தந்து சகோதரப் பான்மை பாராட்டி அளவளாவி வந்திருக்கின்றனர். வெளி நாட்டாரும் தமிழர்களது விருந்தோம்பும் நற்குண மறிந்து உடன்பிறந்தார்போல் அன்புகொண்டு வாழ்ந்து வரலாயினர். பண்டைத் தமிழ் மக்கள் ‘தமிழ் நாடு எங்கள் தேசம்; அதில் வாழ்பவர் எங்கள் சகோதரர்’ என்ற குறுகிய மனப்பான்மை கொண்டு, “தமிழ் நாடு தமிழர்க்கே; பிறருக்கு இங்கு இடமில்லை” யென வெளி நாட்டாரை விரட்டி யடிக்கவில்லை என்பதை இன்றைய கிளர்ச்சியாளர் கவனிக்கவேண்டும்.

“யாதும் ஊரே! யாவருங் கேளிர்” என்று மொழிந்தவர் ஒரு தமிழ் மகன்—சங்ககாலத்துத் தமிழ்ப் புலவன்—புறநானூறு என்னும் பெருநூலில் உயர் பீடம் பெற்ற நல்லிசைப் புலவன் என்பதைத் தமிழ்ப் பேரறிஞர்கள் அறிவர்; தமிழர்களுக்காகக் கச்சை கட்டிக்கொண்டு புறப்பட்டிருக்கும் தமிழ்ச் சகோதரர்களும் அறிய வேண்டுமென்பது நம் அவா. “ஒன்றே குலமும்;

ஒருவனே தேவனும்" என்று அருளிய திரு மூலர் வழிவந்த தமிழ் மக்கள், 'உலக மெல்லாம் தங்கள் உறையுள் (தேசம்); உலக மக்களெல்லாம் தங்கள் சகோதரர்கள்' என்று உரிமை பாராட்டிய பரந்த நோக்கமும் விரிந்த மனப்பான்மையும் உடையவர்கள் என்பதை உலக மறியுமே! அப்படி யிருக்க, நம் நாட்டிலேயுள்ள ஒரு சிலர் அறியாத தேன்? அறியாதிருப்பதுதான் ஆச்சரியமாயிருக் கிறது.

தற்போது நம் நாட்டில் பல மொழியாளர், பல சமயத்தினர், பல தேசத்தினர் வாழ்ந்து வருகின்றனர். அப்படியிருக்க, பிராம்மண ரெல்லாரும் ஆரியர் என்றும், மற்றையோர் எல்லாரும் திராவிடர் என்னும் ஒரு கட்டுக்கதை கட்டிக் கூறி, இவர்கள் ஒருவர் மற்றொருவரோடு சேரலாகாது என்று வாதிக்கின்றனர். ஆரியர்-திராவிடர் என்ற பிரிவு சரித்திரங் கூறும் பழங் கதை. அப்பழங்கதையை—அதுவும் அந்நியநாட் டுச் சரித்திர ஆசிரியர்கள் எழுதிவைத்த பழங் கதையை இப்போது கூறுவதில் புண்ணிய மென்ன? புருஷார்த்த மென்ன?

அப் பண்டைக்காலச் சரிதமும் இன்னமும் சரியாக முடிவு கட்டப்படவில்லை. பண்டைக்

காலச் சரித்திர ஆசிரியர்கள் தங்கள் கற்பனை சக்தியை யெல்லாம் உபயோகித்து சரித்திரமாகப் புனைந்துவைத் திருக்கின்றனர். அவர்களுடைய ஆராய்ச்சி முடிவைக்கொண்டு, நிலையாக இருக்கப்பட்ட ஒன்றை மாற்றவோ அழிக்கவோ முயல்வது வீண் வேலையாகும். அத்தகைய பண்டைக்காலச் சரித்திர ஆசிரியர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியா முழுவதிலும் பழங் குடி மக்கள் இருந்தனர் என்றும், பிறகு திராவிடர் என்போர் அவர்களைத் தெற்கே விரட்டிவிட்டு இந்தியாவில் பரவினர் என்றும், இத் திராவிடர்களுக்குப் பிறகு ஆரியக் கூட்டத்தார் இந்தியாவில் புகுந்து திராவிடர்களைத் தெற்கே துரத்தினரென்றும் ஒருவாறு கயிறு கட்டிவிட்டனர். இதுதான் நம் தேச சரித்திரம் என்று பலர் ஏற்றுக்கொண்டு, ஆரியர்-திராவிடர் என்னும் பாகுபாடுகளைப் புகுத்த முன்வந்திருக்கின்றனர். சரித்திர ஆசிரியர்களுக்குத் துணையாக, மொழி நூல் வல்ல அறிஞர்களும் ஆரிய மொழிக் கூட்டம், திராவிட மொழிக் கூட்டமென வகுக்கலாயினர். இவ்விதக் கருத்துக்களை முதன் முதலாக வெளியிட்டவர்கள் நம் நாட்டவரல்லர்; வெளி நாட்டினரே யாவர் என்பதைக்

கவனிக்கவேண்டும். நம் நாட்டினர் ஒன்றுபட்டிருப்பதைக் கண்டு பொறாமை கொண்டு, தங்கள் சமய, அரசியல் செல்வாக்கை அதிகப்படுத்த மேனாட்டினர் வேற்றுமையை யுண்டுபண்ணும் பொய்க் கதைகளைப் புனைந்து உரைத்து நம் மக்களிடையே பரவச் செய்திருக்கலா மல்லவா! பிரித்தாளுந் தந்திரத்தில் பேர்போன அன்னிய நாட்டினர் இந்து-முஸ்லிம், ஆரியர்-திராவிடர்களை வேறுபடுத்தி அவர்கள் ஒருவரோடொருவர் போரிடும் வகையில் பல பொய்க் கதைகளை நம் தேச சரித்திரத்தில் நுழைத்து வைத்திருக்கின்றனர் என்று நம் தேசத் தலைவர்கள் அபிப்பிராயப் பட்டு, அதற்குப் பரிகாரந் தேட முயன்று வருவது அனைவரும் அறிந்த விஷயம். இவ்விதம் வெளிநாட்டார் வேற்றுமையை உண்டுபண்ணும் நோக்கத்தோடேயே எழுதி வைத்த கற்பனைக் கதைகளை ஸர். பன்னீர்செல்வம் போன்றோர் வேத மொழியாகக் கொண்டு மக்களைப் பிரிக்க முயல்கின்றனர். என்னே பரிதாபம்!

## 3. பொருத்தமற்ற வாதம்

இனி, ஸர். பன்னீர்செல்வம் தலைமைப் பேருரையில் வெளியிட்டுள்ள பல நூதன கருத்துக்களை ஒவ்வொன்ருக ஆராய்வோம். தமிழர் யார்? தமிழன் என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன? என்பவற்றிக்கு அப் பெரியார் செய்துள்ள விரிவுரையை—வியாக்கியானத்தைக் கவனியுங்கள். "யார் ஒருவர் தொன்றுதொட்டு தலைமுறைத் தத்துவமாக தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு அம்மொழியைப் பிரதானமாக அநுட்டித்துப் போற்றி வருவாரோ அவரே தமிழர் ஆவரே யன்றி, மற்றெருருவருக்கும் அப் பதம் பொருத்தமாகாது" என்று முடிவு கட்டுகிருர். தமிழர் யார்? என்பதற்குரிய இம் முடிவு பொருத்தமானதென்றே ஒப்புக் கொள்வோம். அவர் இவ்வளவோடு நின்றிருந்தால் நன்ருயிருந்திருக்கும். ஆனுல், அவர் அத்துடன் நில்லாது, "அன்னிய நாட்டினர் தமிழ் மொழியில் பெரும் ஆராய்ச்சி செய்து தேர்ச்சி பெற்று புலமைத் தன்மை அடைந்திருப்பினும், **தமிழ் மொழிக்கு என்ன அரும் பெருந் தொண்டு புரிந்திருப்பினும்**

அவர் தமிழர் ஆகமாட்டார்" என்று அறுதி யிட்டுக் கூறுகிருர். இது அவ்வளவு சரியான கொள்கையன்று; இதை நடுநிலை யுணர்ச்சியுள்ள அறிஞர்கள் ஒப்புக்கொள்ளார் என்பது நம் கருத்து. தமிழர் என்றும் இவ்விதக் குறுகிய நோக்கங்கொண்டவர்க ளல்லர். தமிழ் நாட்டில் தற்போது பல தேசத்தினரும், பல மொழியின ரும், பல சமயத்தினரும் வாழ்ந்து வருகின்ற னர். அவர்கள் ஸர். பன்னீர்செல்வம் தெரிவித் திருக்கிறபடி, தொன்று தொட்டு தலைமுறைத் தத்துவமாக தமிழ் மொழியைத் தாய் மொழியா கக் கொண்டிராவிடினும், அம் மொழியைப் பிர தானமாக அனுட்டித்துப் போற்றிவராவிடினும் தமிழ் நாட்டைத் தஞ்ச மடைந்து விட்டிருக்கின் றனர்; அதைத் தங்கள் நாடு என சொல்லிக் கொள்ளவுந் தயாராயிருக்கின்றனர். அத்தகைய வர்களைத் தொன்று தொட்டு தலைமுறைத் தத்துவ மாக தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளவில்லை என்ற ஒரு காரணங்கொண்டு மட்டும் தமிழர்க ளல்லர் எனத் தள்ளிவிட முடி யுமா? தமிழ் நாட்டில் தமிழர்களாகிய நம்முடன் வாழ்பவர்கள் தேசம், மொழி, சமயம் முதலிய வற்ருல் வேறுபட்டிருப்பினும், நம் நாட்டைத்

தங்கள் நாடாகவே கொண்டு நம்முடன் சகோ தரப்பான்மை பாராட்டி வாழ்வார்களாயின் அவர்களை நம் போன்ற தமிழர்களென்றே ஒப்புக் கொண்டு அவர்களை நம் சகோதரர்களாக ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். அப்படியிருக்க, அவர்கள் தமிழ் மொழியையுங் கற்று, அம் மொழியில் பெரும் ஆராய்ச்சியுஞ் செய்து, தமிழ் மொழிக்கு அரும் பெருந் தொண்டு புரிந்திருப் பினும்கூட, அன்னிய நாட்டிலிருந்து வந்தவர்கள் என்ற காரணத்தால் தமிழர்களாகமாட்டார்கள்; அவர்களைத் தமிழர்களாக ஏற்றுக்கொள்ள முடி யாது என்று ஸர். பன்னீர்செல்வம் கூறுவா ரானால், அதை நாம் எப்படி ஏற்றுக்கொள்வது? தமிழ் மொழியில் புலமைபெற்றதோ டல்லாமல் தமிழ் மொழிக்கு அரும் பெருந் தொண்டு புரிந் திருக்கும் அறிஞர்களை, தமிழரல்லர்; அயலார் என்று கூறிப் புறக்கணிக்க, தமிழன் அவ்வளவு நன்றி கெட்டவனல்லவே! ஸர். பன்னீர்செல்வம் உதாரணமாக எடுத்துக் காட்டிய ரெவரண்டு பெஸ்கி, ரெவரண்டு போப் ஆகிய பேரறிஞர்களைத் தமிழ் மக்கள் எவ்வளவு உயர்வாக மதித்திருக் கிறார்கள்; எவ்வளவு உன்னத ஸ்தானத்தில் அவர்களை வைத்திருக்கிறார்கள் என்பதை அறிந்

திருந்தால், ஸர். பன்னீர்செல்வம், 'வீரமா முனிவராவது, போப்பையராவது தமிழரென்று கருதப்படுவார்களா?' என்று கூறியே இருக்க மாட்டார். தம் கிறிஸ்துவ சமயக்கொள்கையைச் சிறப்பிக்க, 'தேம்பாவணி' முதலிய நூல்களைத் தமிழ் இலக்கியச் சுவை சொட்டச் சொட்டப் பாடி யிருப்பதோடு, ஆங்கில முறையைத் தழுவி முதன் முதலாக, தமிழ் மொழியில் அகராதி யொன்றை இயற்றி வழி காட்டித்தந்த வீரமா முனிவர் என்னும் சிறப்புப் பெயரோடு விளங்கிய பெஸ்கி ஸ்வாமியாரைத் தமிழர்கள் மறக்க முடியுமா? தமிழ் மொழி என்னும் பெருங் கடலில் மூழ்கித் தம் நுண்ணறிவால் கரைகண்ட போப்பையர், திருக்குறள், திருவாசகம், நாலடியார் முதலிய சிறந்த மணிகள்—முழு மாணிக்கங்கள் அதில் இருப்பதைக் கண்டு பொறுக்கி யெடுத்து ஆங்கில மொழியாகிய பசும் பொன்னில் பதித்துக் கட்டிடங் கட்டி நகைகள் செய்து, 'இதோ, விலையில்லா மாணிக்கங்கள்' என உலகுக்குக் காட்டிய உத்தமரல்லவா! திருவாசகம் முதலிய ஒப்பற்ற தமிழ் நூல்களைப் போப்பையர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டதனு லல்லவோ உலகத்தார் சிறப்பாக மேனுட்டார்—உயர்தனிச் செம்மொழி

யான தமிழ் மொழியின் சிறப்பையும், அதன் இலக்கியச் செல்வத்தையும் அறிந்து பாராட்ட நேர்ந்தது. தொன்று தொட்டு தலைமுறைத் தத்துவமாக தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள எந்தத் தமிழ் மகனுஞ் செய்யாத ஒரு ஒப்பற்ற செயலை—தமிழ் மொழியின் மறு மலர்ச்சியைக் கண்ட வீரமாமுனிவரையும் போப்பையரையும் தமிழரென்று ஒப்புக் கொள்ளாவிடில், பின் யாரை ஒப்புக் கொள்வது? தமிழ் மொழிக்கு அழியாப் புகழையும் ஆக்கத்தையும் தங்கள் அரு முயற்சியால் உண்டாக்கிய பெருமான்களான வீரமாமுனிவரையும் போப்பையரையும் தமிழ் மக்கள்—தமிழ்ப் பெரு மக்கள் என்றே கொண்டாடுகிறோம்; ஸர். பன்னீர்செல்வம் உள்ளிட்ட தமிழ்ப் பெரியார்களும் குறுகிய மனப்பான்மையை விட்டு அவர்களைத் தமிழ்ப் பெருமக்கள் என உரிமை கொண்டாடவேண்டுமென்பது நம் பேரவா.

இச்சமயத்தில், போப்பையரைப்பற்றித் தமிழ் நாட்டில் வழங்கும் ஒரு வரலாற்றை ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியாருக்குச் சமர்ப்பிப்பது பொருத்தமாயிருக்கும் என நம்புகிறோம்.

அதாவது கிறிஸ்து சமயத்தைத் தமிழ் நாட்டில்

பரவச் செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு முதலில் நம் நாடு வந்த ரெவரண்டு போப், தமிழ் இலக்கியச் செல்வங்களை ஆராய்ந்து அறிந்தபின், இங்கேயே தம் வாழ்நாளைக் கழித்துவந்தார். அவர் இறக்குந்தருவாயில் எழுதியிருந்த மரண சாஸனத்தில் தாம் இறந்துபோனால், தமது பிரேதத்தை அடக்கஞ்செய்யும் கல்லறையில் நாட்டப் படும் நடுகல்மீது 'போப்பையர் ஒரு தமிழ் மகன்' என்று பொறித்து வைக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தாராம். அவரது விருப்பப்படியே இவ் வேண்டுகோள் நிறைவேற்றி வைக்கப்பட்ட தென்றுங் கூறப்படுகிறது. இதிலிருந்து போப் பையருக்குத் தமிழ் மொழி மீதும், தமிழ் நாட் டின்மீதும் எவ்வளவு பற்று இருந்தது என்று அறிந்துகொள்ளலாம். இவ்விதம் தமிழ் மொழி மீது உயிரை வைத்திருந்த போப்பையரைப் பிறப் பினால் ஆங்கிலேயரென்ற காரணத்தால் தமிழரல் லர்; அந்நியரே என்று கூறுவது எவ்வளவு அநி யாயம்!

ஸர். பன்னீர்செல்வம் தமது ஆராய்ச்சி யறிவைக்கொண்டு இன்னும் ஒரு படி மேலே போகிறார். "........அவ்வாறே வெளிநாட்டிலிருந்து நம்மிடத்தில் குடியேறுகிறவர்கள் **எவ்வளவு காலங்க**

ளுக்கு முன் நம்மிடம் வந்து சேர்ந்தவர்களாயினும் இந் நாட்டிலேயே எப்போதும் இருக்கும் நோக்கத்துடன் உள்ளவர்களாயினும் நம் தமிழ் மொழியைத் தம் மொழியாகக் கொள்ளாமலிருப்பின் அவர்கள் தமிழர்கள் ஆகமாட்டார்கள். அவசிய நிமித்தமும், சௌக்கியத்தை உத்தேசித்தும் நம் மொழியைப் பழக்க வழக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு காரணத்தைக் கொண்டு மாத்திரம் தமிழராகமாட்டார்கள்.

"குறிப்பாக நம் நாட்டிலுள்ள பார்ப்பனர்கள் தமிழர் ஆவார்களா? ஆகமாட்டார் என்பதுதான் என் முடிவு" என்பது அவரது அழுத்தந் திருத்தமான தீர்மானம். இத் தீர்மானம் எவ்வளவு விசித்திரமானதும் விபரீதமானதுமாகுமென்பதை வாசகர்களுக்கு எடுத்துக் கூறவேண்டியதில்லை. நம்முடன் கலந்து வாழும் பிராம்மணர்கள் தமிழர்களல்லர் என்பதற்கு அவர் கூறும் காரணத்தைக் கேளுங்கள்.

"நம் நாட்டில் அனேக நூற்றுண்டுகளாக இருந்திருந்தும் நம்முடன் கலவாமல் தங்களை ஒரு தனிப்பட்ட வகுப்பினராகவே வைத்துக் கொண்டது மாத்திரமல்லாமல், தாங்களே ஏனையோரைவிட மேல் வகுப்பினர் என்று சொல்லிக்

கொண்டு தம் சொந்தமொழி வடமொழியாகிய சமஸ்கிருதமே என்றும், அம் மொழி நம் மொழியாகிய தமிழ் மொழியைவிட மேன்மைப்பட்டதென்றும், அது ஒரு தெய்வீகமொழியென்றும், அம் மொழியே கடவுள் வணக்கத்திற்கும், மற்றுமுள்ள அவர்களுடைய சடங்குகளுக்கும் பொருத்தமானதென்றும், தமிழ் மொழி இக்காரியங்களுக்குப் பொருத்தமற்றதென்றும் அதை இழிவுபடுத்திப் பேசுபவர்கள் எவ்விதத்தில் தமிழரென்று அழைக்கப்பட பொருத்தமுள்ளவர்களென்று எனக்கு விளங்கவில்லை. ஆகவே, பார்ப்பனர்கள் தமிழர் ஆகமாட்டார்களென்று சொல்லுவது மிகையாது"

இவர் காட்டியுள்ள இக் காரணம் எவ்வளவு தூரம் உண்மையானது என்பதைப் பின்னர் ஆராய்வோம். ஸர். பன்னீர் செல்வம் நம் நாட்டில் நம்மோடு இரண்டறக் கலந்து வாழும் பிராமண சகோதரர்களைத் தமிழர்களல்லர் என்று என்ன நோக்கத்தோடு கூறுகிறார் என்பதையே இங்கு முதலில் கவனிக்கவேண்டுமென்று விரும்புகிறோம். நம் நாட்டிலுள்ள பிராம்மண வகுப்பாரெல்லாம் ஆரியர்கள் ; ஆரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பது ஸர். பன்னீர் செல்வம் நினைப்பு.

இதை மனதி லுட்கொண்டே அவர், "வெளி நாட்டிலிருந்து நம்மிடத்தில் குடியேறுகிறவர்கள் எவ்வளவு காலங்களுக்குமுன் நம்மிடம் வந்து சேர்ந்தவர்களாயினும், இந் நாட்டிலேயே எப் பேரதும் இருக்கும் நோக்கத்துடன் உள்ளவர்க ளாயினும்" என்று முன்னதாக இவ்வளவு தூரம் பீடிகை போட்டுக்கொண்டார். எனவே, ஸர். பன்னீர் செல்வம் கருதுகிறபடி அல்லது முடிவு கட்டியிருக்கிறபடி பிராம்மணர்கள் ஆரியர்களா? அல்லவா? என்பதை முதலில் ஆராயவேண்டியது அவசியம். இதற்குத் தமிழர் வரலாற்றையும் தமிழ் நாட்டு வரலாற்றையும் பரிசீலனை செய்து பார்க்கவேண்டியது இன்றியமையாததென்றும் நாம் கருதுகிறோம். நாம் முன் சொன்னபடி மேனாட்டுச் சரித்திராசிரியர்கள் தங்கள் கற்பனா சக்தியையுங் கலந்து எழுதியுள்ள பண்டைத் தேச சரித்திரத்தை—ஸர். பன்னீர் செல்வம் கோஷ்டியார் ஆதாரமாகக் காட்டும் சரித்திர ஆராய்ச்சியைக் கொண்டே நமக்குப் புலப்பட்ட உண்மைகளை எடுத்துக் காட்டுவோம். ஸர். பன் னீர் செல்வம் கூறுகிறபடி, பிராம்மணர்கள் தமி ழர்களல்லவானால், இப்போது தமிழரெனக் கருதப் படும் நாமும் உண்மையில் தமிழரல்லர்; தமிழ்

நாட்டிற் குரியவரல்லரென்றே நாம் கூறுவோம். பிராம்மணர்கள் தமிழர்கள் அல்லரென்பதற்கு ஸர். பன்னீர் செல்வமும் அவரது கோஷ்டியாரும் என்னென்ன காரணங்கள் கூறுகிறார்களோ, அதே காரணங்கள் நமக்கும் பொருந்தும். அதை விளக்குவதற்குமுன், 'தமிழர் யார்?' என்னும் கேள்விக்குச் சரித்திர ஆராய்ச்சியாளர்களும், மொழி நூல் வல்லார்களும் தங்கள் ஆராய்ச்சிகளின் முடிவைக்கொண்டு அளித்துள்ள பதில்களை வாசகர்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

# 4. தமிழர் யார்?

'கன்னியாகுமரிக்குத் தெற்கே வெகு தூரம் வரை பரவியிருந்த லெமூரியா என்னும் கண்டத்திலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்தவர்களே தமிழர்கள்' என்பர் ஒரு சாரார். 'தமிழர்களின் மூதாதையர் ஆசியாவின் மத்திய பிரதேசங்களிலிருந்து இங்கு குடியேறி யிருக்கலாம்' என திரு. கால்ட்வெல் முதலிய மேனாட்டுப் பேராசிரியர்கள் கூறுகின்றனர். 'பண்டைக் காலத்தில் நாகரிக முதிர்ச்சி பெற்றிருந்த சிறிய ஆசியா, அசிரியா பிரதேசங்களிலிருந்து கடல் வழியாய்த் தென்னிந்தியாவில் புகுந்து விந்திய மலைவரையும் பரவியவர்களே தமிழர்கள்' என்பார் 'தமிழ் ஆராய்ச்சி' ஆசிரியர் ஸ்ரீநிவாஸ ஐயங்கார். 'தென்னிந்திய மேல்பாகத் தீவுகளின் வழியாய்த் தமிழ் நாட்டில் வந்து குடியேறிய ஆசிய மேனாட்டவரே தமிழர்' என்று வலியுறுத்துகிறார் காலஞ்சென்ற பண்டித சவரிராயர். திரு. கனகசபைப் பிள்ளையவர்களோ, 'தமிழர் மங்கோலிய வகுப்பினரென்றும், அவர்கள் வங்காள நாட்டின் வழியாக இந்தியாவினுட்

புகுந்து, தரை, கடல் ஆகிய இரு வழிகளிலும் தென்னிந்தியா வந்தவர்கள்' என்றும் '1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்ற தமது நூலில் எழுதியிருக்கிறார். திரு. செல்வகேசவ ராய முதலியார் எம். ஏ., தாம் இயற்றிய "தமிழ்" என்னுஞ் சிறு நூலில், 'திராவிடர்கள் (தமிழர்கள்) ஆசிய மத்தியப் பிரதேசங்களிலிருந்து இமயமலையின் வடமேற்கு வடகிழக்குக் கணவாய்களின் வழியாய் இந்தியாவில் குடியேறியவர்கள் என்பது விளக்கமாகிறது' என்று எழுதியிருப்பதோடு, 'கங்கைக் கரையிலிருந்து ஈழ மண்டலம் வரையிலுள்ள அநார்யரான திராவிடருள் பல மரபினர் இன்றளவும் வேறு கலப்பின்றி ஒரே வகையான குணம் குறிகள் உள்ளவர்களாகத் தோற்றுதலால் இவர்கள் ஆதியில் இந்தியா முழுவதும் பரவியிருந்தனர் என்பது உறுதியான கொள்கையே' என்றும் மற்றொரு இடத்தில் அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிறார். 'தமிழர் இந்திய வடமேற்குக் கணவாய் வழியாக வந்து சிந்துநதிச் சம வெளிகளில் தங்கியிருந்து இடம் போதாமையினால் பிறகு கங்கை நதிச் சமவெளியிலும் குடியேறினார்கள். துரானியர் தமிழரை வென்று துரத்திவிட்டனர்' என்று

திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி 'தமிழ் மொழி வரலாறு' என்னும் நூலில் எழுதியிருக்கிறார். இவர்கள் அபிப்பிராயங்களெல்லாம் ஒரு புறமிருக்க, திரு. ராப்ஸன் என்னும் ஐரோப்பிய சரித்திராசிரியர் கூறும் அபிப்பிராயத்தைக் கேளுங்கள். 'பெலுசிஸ்தான பாகங்களில் இப்போதும் வழங்கும் புருஹீ பாஷைக்கும் திராவிட பாஷைகளுக்குமுள்ள ஒற்றுமைகளை நோக்குமிடத்து, திராவிடர் இந்தியாவினுள் நுழையாமுன் பெலுசிஸ்தானத்தில் தங்கியிருந்திருக்கலாம் என ஊகிக்க இடமிருக்கிறது' என 'Ancient History' என்னும் ஆங்கில நூலில் குறிப்பிட்டிருக்கிறார். 'தமிழரும் ஆரியரும் ஒரே வகுப்பினரே' எனக் கூறுவாருமுண்டு. 'தென்னிந்தியாவிலிருக்கும் தமிழ் மக்களுங்கூட வடக்கே இருந்துவந்த ஆரியர்களேயாவர். இந்தியா முழுதுமே ஆரிய மக்களேயன்றி வேறன்று' என்று வேதாந்தகேசரி விவேகானந்த சுவாமிகள் பேசியதாக ஒருவர் 'ஹிந்து'ப் பத்திரிகையின் பழைய தாளொன்றில் எழுதியிருக்கிறார். 'தமிழர்கள் இந்தியா வெங்கணும் பரவியிருந்தனர்: பல இனத்தாரோடுங் கலப்புண்டிருந்தனர்' என்னும் உண்மையை ஆசிரியர் திரு. ரிஸிலே

என்பவர் முகத்தையும் மண்டையையும் அளந்து இந்நாட்டு மக்களைப் பல பிரிவாகப் பிரித்து ஆராய்ந்த தம் ஆராய்ச்சி வாயிலாகத் தெரிவித்திருக்கிறார்.

சர். ஜான் மார்ஷல் என்ற ஆராய்ச்சியாளர் சமீபத்தில் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் தம் ஆராய்ச்சியை நடத்திச் சில உண்மைகளைக் கண்டுபிடித்திருக்கிறார். அதிலிருந்து, சிந்து நதி தீரத்தில் பல்லாண்டுகளாக மிகவும் நாகரிகம் பெற்றவர்கள் வாழ்ந்திருந்தார்கள். அவர்களது நாகரிகம் சிந்துநதி தீரத்தின் கிழக்கிலும் தெற்கிலும் உள்ள மற்ற நதி தீரங்களிலும் பரவியிருந்தது. இந் நாகரிகம் ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர் இருந்ததாதலால், அது திராவிடர்களுடைய நாகரிகம் என்று ஊகிக்க இடமிருக்கிறது. ஆரியர் இந்தியாவுக்கு வந்து திராவிடர்களைத் தென்னாட்டிற்குத் துரத்துவதற்கு முன்னே அவர்கள் மேற்குறித்த இடங்களில் வசித்துவந்தவர்களென்றும் தமிழர் சிந்து நதிக் கரையினின்றும் தமிழ் நாட்டில் குடியேறியவர்கள் என்றும் ஏற்படுகிறது. மஹேஞ்சதாரோ என்னுமிடத்தில் காணப்படும் எழுத்துக்கள் யாவும் தமிழ் எழுத்துக்களின் பழைய வடிவமென்றும், அவ்

வெழுத்துக்கள் இந்தியாவிலுள்ள வேறு எந்த மொழியினுடைய தொடர்பு முடையனவாகக் காணப்படவில்லை என்றும் கூறி, திரு. எச். ஹீராஸ் என்னும் ஐரோப்பியர் சிந்துநதி தீரத்தில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மஹேஞ்சதாரோவைக் குறித்து எழுதிய கட்டுரையில் வலியுறுத்தியிருக்கிறார். இவரது ஆராய்ச்சியின்படி பார்த்தால், தமிழர் சிந்து நதிக்கரையி னின்றும் தமிழ் நாடென வழங்கும் தென்னிந்தியாவில் குடியேறியவர்கள் என்று ஏற்படுகிறது.

திருவாளர்-இராவ் சாகேப்-கோவை-ம. இராமச்சந்திர செட்டியார் B.A., B.L., அவர்கள் "தமிழ்ப் பொழில்" என்னும் மாதப் பத்திரிகையில் பழந் தமிழரைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அவர்கள், "பன்மொழியாராய்ச்சியாளர்களான பண்டித கிரீர்சன், கால்ட்வெல் முதலியவர்கள் பழந் தமிழர்களின் முன்னைய சரிதத்தை வெகு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். அவர்கள் கண்டுபிடித்த சித்தாந்தங்களை உயர்திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள் வெகு தெளிவாக,

'சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமோ'

என்று எடுத்துரைத் திருக்கிருர்கள். இவர்கள் இச் சித்தாந்தத்தை மொழி ஆராய்ச்சியால் கண்டு பிடித்து நிரூபித்திருக்கிருர்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி இந்து தேசம் முழுமையி லும் பழந் தமிழர்களே (திராவிடர்கள்) குடியிருந் தார்கள். பிறகு வடமேற்கு மூலையிலிருந்து ஆரி யர்கள் படையெடுத்துவந்தார்கள். பழந் தமிழர் கள் மொழி வளர்ச்சியிலும் நாகரிகத்திலும் முதிர்ச்சிபெற் றிருந்தார்கள். ஆனல் படை யெடுத்துவந்த ஆரியர்களோ இள நாகரிகம் படைத்தவர்கள். மாடு மேய்த்தல், படையெடுத் தல், இவைகளில் தேர்ந்தவர்கள். மேலும் குளிர் நாட்டிலிருந்துவந்தபடியால், தேக வலிவு பெற் றிருந்தார்கள். ஆகவே, புதிதாக வந்த ஆரியர் கள் சுலபத்தில் பழந் தமிழரை வெருட்டித் தெற்கே துரத்திவிட்டார்கள். செழிப்பான பிர தேசங்களான கங்கை, யமுனை, சிந்து, பிரமபுத் திரா முதலிய நதித் தீரங்களில் குடியேறினர்கள். அதுமுதல் தென்னுட்டிற்குத் தமிழர்கள் மாத்தி ரம் சிறு சிறு வகுப்புகளாகக் கூடித் தஞ்சம் அடைந்தார்கள். ஆகவே, இக்காலத்திலும் வட நாட்டு உட்பிரதேசங்களோடு தென்னுடு முழுமை யிலுமே பழந் தமிழரின் சந்ததியாரைக் காண்கி

றேம். மொழி ஒற்றுமை, எண்ண ஒற்றுமை, நாட்டுக் கதை, பழமொழி, பழக்கவழக்கம் இவை களில் ஒற்றுமை, உடலில் அங்க அமைப்பில் ஒற் றுமை இவைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து மேலே சொல்லிய நிபுணர்கள் இவ்விதச் சித்தாந் தத்தைக் கண்டுபிடித்தார்கள். பிறகு ஆரியர்கள் வடநாட்டில் வெற்றிபெற்ற பிறகு தென்னாட்டை யும் நோக்கினார்கள். ஆனால் தென்னாட்டிலிருந்து தமிழர்களை நிர்மூலப்படுத்த முடியவில்லை. தம்மி லும் நாகரிகத்தில் முதிர்ச்சி பெற்றவர்களை ஒரே முயற்சியில் நிர்மூலப்படுத்த முடியாது. ஆனால் சிறிது சிறிதாக தங்கள் நாகரிகத்தைப் புகுத்த முயன்றனர். பல பண்டிதர்களும், சமயாசாரி களும் தெற்கே வந்து, தத்துவ சாத்திரம், சமயம் முதலியவைகளைப் போதித்தார்கள். அமைதி யாகச் செய்யும் இவ்வித முயற்சி நாளாவட்டத் தில் வெற்றியடையும் அன்றோ? ஆகையால்தான் தமிழ் நூல்களிலும் பழக்க வழக்கங்களிலும் ஆரியர் கூற்றுகள் அதிகமாகப் பரவி வந்தன. மிகப் பண்டைய நூலான தொல்காப்பியத்தி லேயே வடமொழிக் கலப்பும், நடப்புக் கலப்பும் காணும்போது வேறு ஆதாரம் கூறவேண்டுவ தில்லை. ஆகவே, 5000 ஆண்டுகளுக்கு முன்

னமே இவ்வித வெள்ளம் ஒன்று வந்து தமிழ் நாட்டின் இயற்கை வளத்தினை ஒருவாறு மாற்றத் தலைப்பட்டது எனச் சொல்லவேண்டும்" என்று பழந் தமிழர்கள் வரலாற்றை விரிவாகக் குறிப்பிட்டு, ஆரியர் வருமுன், தமிழர்கள்தான் இந்தியா முழுதும் இருந்து வந்தார்கள் என்ற உண்மையை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

"என்சைகிலோபீடியா பிரிட்டானிக்கா" என்ற விஷய அகராதி புத்தகத்தில் மொழிகளைப் பற்றிக் கூறும்போது, சிந்து மாகாணத்தை யடுத்துள்ள பெலுசிஸ்தானத்தில் வாழும் மலைச் சாதியாரிடை வழங்கும் 'புருஹீ' என்ற மொழியும், சோட்டா நாகபுரியில் வழங்கப்படும் 'குயி' என்ற மொழியும், மத்திய மாகாண காட்டு சாதியாரிடை வழங்கும் 'முண்டா' என்றமொழியும் தமிழ் மொழியைச் சேர்ந்தனவென்றும், மேற்குறித்த அம் மொழிகள் தமிழ் மொழிக்குரிய விதிகளையே பெரிதும் கொண்டிருக்கின்றன என்றும் குறித்திருக்கிறது. இது தமிழர் ஒருகாலத்தில் வட நாடுகளில் வாழ்ந்து வந்திருக்கிறார்களென்ற சரித்திர உண்மையை வெளிப்படுத்துவதாக இருக்கிறதல்லவா?

சில வருஷங்களுக்குமுன் பஞ்சாப்பில் ஹர

பாதம் அல்லது ஹரப்பா என்று வழங்கிற இடத்தில் வெட்டி எடுக்கப்பட்ட சாமான்களை ஆராய்ச்சி செய்து பார்த்தபோது, ஒருகால் தமிழர்கள் மத்தியதரைக் கடல் ஓரத்திலுள்ள கிரீட், சின்ன ஆசியா போன்ற நாடுகளில் வசித்த மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களா யிருக்கலாம் என அவற்றிலிருந்து சரித்திராசிரியர்கள் ஊகிக்கின்றனர்.

பெலுசிஸ்தானத்தில் வழங்கும் மொழி நமது தமிழ் மொழிபோலிருக்கிறது என்று மொழி நூல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். தண்ணீர் என்னுந் தமிழ்ச் சொல் அம் மொழியிலும் அவ்விதமே வழங்குகிறதாம். மஹேஞ்சதாரோவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பழைய சின்னங்களும் தமிழ்க் கலை நாகரிகங்களையே காட்டுகின்றனவாம். எனவே, தமிழர் பெலுசிஸ்தானம் வழியாக இந்தியாவிற்குவந்து தமிழ்நாட்டில் குடியேறி யிருக்கவேண்டும் என ஏற்படுகிறதல்லவா!

வட நாட்டில் அநாகரிக ஜாதியினரிடம் தமிழ் மொழி கொச்சையாகவேனும் வழங்கி யிருக்கிறது. குஜரத் முதல் பெலுசிஸ்தானம் வரை சௌராஷ்டிர நாடாக இருந்தபோது தமிழ் வழங்கி வந்ததாக ஆதாரங் கூறுகிறது.

தமிழர்கள் வட மேற்குக் கணவாய்களின் வழியாக, டார்டாரி, திபேத் முதலிய நாடுகளிலிருந்து வந்து இந்தியாவில் நுழைந்தார்கள் என வேறு சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். பின்னர், அவர்கள் பர்மா, கிழக்கோரம் முதலிய இடங்களிலிருந்து வந்த மங்கோலியர்களோடும் மத்திய ஆசியாவினின்றும் வந்த சித்தியர்களோடும் கலந்தனர் எனவும், அவர்களுக்குப் பொதுவில் துரானியர் எனப் பெயர் வழங்கி வந்ததெனவும் சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். மற்றுஞ் சில சரித்திராசிரியர்கள் அத்திராவிடர்கள் மேற்கு ஆசியாவிலிருந்து கணவாய்களின் வழியாக வந்திருக்க வேண்டுமென்றும், அவர்கள் அசிரியா, சிறிய ஆசியா முதலிய இடங்களில் சுமாரியர்களோடும் வசித்திருக்க வேண்டுமென்றும் கூறுவர்.

'தமிழர்கள் ஒரு தனிக் கூட்டத்தார். அவர்கள் துரானிய சித்திய வகுப்பைச் சார்ந்தவர்கள் என்பது இப்போது ஒப்புக்கொள்ளப்படக்கூடியதன்று' என்று என்சைகிலோபீடியா பிரிட்டானிகா கூறுகிறது.

'தென்னாட்டில் ஆதியில் இருந்தவர்கள் வில்லவரும் மீனவரும் ஆவர். மத்திய ஆசியாவிலிருந்து

வந்த நாகர்கள் அவர்களை வென்றனர். பிறகு மங்கோலிய வம்சத்தைச் சார்ந்த தாம்ரலிட்டிகள் (தமிழர்கள்) திபேத்திலிருந்து நான்கு கிளைக ளாய்ப் பிரிந்து கீழ் சமுத்திரக் கரையோரமாய் வந்தார்கள். அவர்களுள் மாறர் என்பவர் பாண் டிய நாட்டையும் திரையர் என்பவர் சோழ மண்டலத்தையும், திரையருக்கு மூல புருஷர்க ளான வானவர் ஏதோ ஒரு நாட்டையும் கோலர் என்பவர் கொங்கு தேசத்தையும் ஸ்தாபித்தவர்க ளாவர்' என்று திரு. கனகசபைப் பிள்ளையவர்கள் தமிழர்களின் பாகுபாடுகளை விவரித்துரைத்திருக் கிறார்.

'இப்போது இருக்கும் இந்தியாவுக்குத் தெற் கில் லெமூரியா என்று ஒரு நாடு இருந்தது. அது தான் தமிழர்களின் ஆதிக் குடியிருப்பு நிலம். ஆரியரும் தமிழரும் கலந்தபோது நாகரிகக் கலப்பு ஏற்பட்டதில் முற்போக்கான பாகம் பெரும் பான்மை ஆரியரால் தமிழரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. அதை ஒட்டியே பாஷையிலும் தமிழ் சொற்கள் அநேகம் சமஸ் கிருத பாஷையில் சேர்க்கப்பட்டது' என்பது பண்டித சவரிராயர் கொள்கை.

இவ்விதம் சரித்திர ஆசிரியர்களின் ஆராய்ச்சி

முடிவுகளும், அபிப்பிராயங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டும், ஒரு விதத்தில் பொருத்தமாகவும் மற்றொரு விதத்தில் பொருத்த மில்லாமலும் மயங்கிக் கிடக்கின்றன. இவற்றை யெல்லாம் ஆராய்ந்து இதுதான் சரியானது; அது தவறு எனக் கூறி ஏற்றுக்கொள்ளுவதும், ஒதுக்கித் தள்ளுவதும் சாமானியமான காரியமன்று. ஆயினும், தமிழ் மக்கள் இப்போது தமிழ் நாடு என வழங்கப்படும் தென்னிந்தியாவின் பூர்வ குடிகள் அல்ல ரென்பதுமட்டும் இவற்றிலிருந்து நிச்சயமாகத் தெரிகிறது. இவர்கள் ஆசியாவின் மேல் பாகத்தினின்றும் தரை, கடல் ஆகிய இரு வழியாகவும் தென்னிந்தியாவிற்கு வந்து குடியேறினர் என்று ஏற்படுகிறது. ஆகவே, இவர்கள் ஆரியர்களைப்போலவே வெளி நாட்டிலிருந்து வந்து தென்னாட்டில் குடியேறியவர்கள் என்றும், ஆரியர் வருவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன் வந்தவர்கள் என்ற ஒரு காரணத்தால் நீண்ட கால பாத்தியதை கொண்டாடலாமே யொழிய, இவர்கள் தென்னாடு எங்களுக்குத்தான் உரியது என்று கொண்டாட சிறிதும் நியாயமில்லை யென்றும், ஆரியர்கள் எவ்விதம் இந்நாட்டுக்கு அந்நியர்களெனக் கூறப்படுகிறார்களோ அவ்விதமே தமி

ழர்களும் அந்நியர்களெனக் கூறப்படுதற்குரிய வர்களென்றும், தென்னாட்டுக்கு உண்மையில் உரிமையுடையவர்கள், இந்நாட்டின் பூர்வ குடிக ளான தொதவர்கள் (இப்போது நீலகிரி முதலிய இடங்களில் வசிக்கும் மக்கள்), கோலர்கள், நாகர்கள் முதலியவர்களே யென்றும் கூறினல் அதை யாரும் நியாயமாக மறுக்க முடியா தன்றோ! இந்நிலையில் ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியார், 'தமிழ் நாடு தமிழர்க்கே' என்று முழங்குவதிலும், தமிழ் நாட்டில் தமிழ் மக்களுக் குத் தவிர, ஆரியர் முதலிய வட நாட்டார்க்கு இடமில்லை யென்று கூறுவதிலும் ஏதாயினும் அர்த்த மிருக்கிறதா என்று வாசகர்களே! யோசி யுங்கள்.

# 5. ஆரியர்-தமிழர்

இவ்விதம் ஆரியரும் தமிழரும் இரண்டறக் கலந்து பல்லாயிரக்கணக்கான வருஷங்களாய் விட்டன. ஆரியர் கலையும் நாகரிகமும் தமிழர்களிடையும், தமிழர் கலையும் நாகரிகமும் ஆரியர்களிடையும் இரண்டறக் கலந்துபோய் எத்தனையோ ஆண்டுகளாயின. இப்போது அவர்களை யெப்படிப் பிரிக்க முடியும்? இன்று தமிழ் நாட்டில் வாழும் மக்களில் யாரை ஆரியரெனச் சொல்வது? யாரைத் தமிழரெனக் கூறுவது? ஒருவேளை பிரிக்க முயன்றாலும், இன்னாரை ஆரியரென்றோ, இன்னாரைத் தமிழரென்றோ கூற முடியாதே! மக்களை இன்ன பிரிவினர், இன்ன தேசத்தினர் என்று பிரிப்பதற்கு உதவியாய் இருப்பவை, உருவ அமைப்பு அல்லது தோற்றம், மொழி, நாகரிகம் ஆகியவைகளாகும். இவ்விதம் ஆரியர்-தமிழர் என்பதற்குரிய லட்சணங்களை அளவு கோலாகக் கொண்டு இன்று தமிழ் நாட்டிலுள்ளாரைப் பிரிப்பதென்றால் சாத்தியமான காரியமல்லவே! ஆரியன் அல்லது ஆரிய சாதியைச் சேர்ந்தவனென ஒரு

வனைக் கண்டுபிடிப்பதென்றால் அதற்குரிய அடையாளங்களை மருந்துக்குக்கூட காண முடியாது. ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியார் கூறுவது போல் பிராம்மண வகுப்பார்தான் ஆரியர்கள்; ஆரிய வம்சத்தைச் சேர்ந்தவர்களென்றால், அவர்கள் ஆரிய வம்சத்தின் வழி வந்தவர்களா யிருக்கலாம்; ஆனல், ஆரியர்க் குரிய இலட்சணங்கள் அங்க அடையாளங்கள் முதலியவைகளை அவர்களிடையே சிறிதும் காண முடியவில்லையே! பழக்க வழக்கங்களில்லையே! என்றுதான் அவர்களைக் கேட்கவேண்டி யிருக்கிறது.

இருப்பினும், சரித்திராசிரியர்கள் கூறியுள்ள ஆரியர்-தமிழர் பிரிவுகளை விவகாரத்துக்கு ஒப்புக்கொண்டே அவர்களது உருவ அமைப்புகளையும், அங்கலட்சணங்களையும் ஆராய்வோம்.

ஆரியர் என்போர் யார்? இக் கேள்வி சரித்திரத்திலேயே பெரிய பிரச்சினையைக் கிளப்பி விட்டிருக்கிறது. ஆரியர்களைப்பற்றிச் சரித்திர ஆராய்ச்சியாளர் பலவிதமாக அபிப்பிராயப்படுகின்றனர். ஆதியில் ஆரியர்கள் மத்திய ஆசியாவில் இருந்து பின் ஜெர்மனி, நார்வே, ஸ்வீடன், இங்கிலாந்து முதலிய இடங்களில் குடியேறினர். அவர்களின் சந்ததியாரே இப்போது ஐரோப்பா

வில் வாழ்பவர்களாவர். வடகிழக்கே சென்ற ஆரியர்களின் சந்ததியாரே தற்காலம், மற்ற தேசங்களைக் காட்டிலும் பல துறைகளிலும் முன்னேற்ற மடைந்திருக்கும் ரஷியர்களாவர். தெற்கு நோக்கி வந்தவர்களின் சந்ததியாரே, இப்போது இருக்கும் பாரஸீகர்கள், இந்தியாவிலுள்ள பிராமணர்களாவர். இவர்கள் குளிர் நாட்டில் வசித்தவர்க ளாதலால், வெள்ளை நிற முடையவர்களாயும், அழகிய தோற்றமுடையவர்களாயு மிருந்தனர். உயரமான தேகம், நீண்ட மூக்கு, மெல்லிய உதடு, எடுப்பான நெற்றி, நீளமான தலை மயிர் முதலிய அங்கலட்சணங்கள் ஆரியர்களை உலகிலுள்ள மற்ற மக்களினின்றும் வேறுபடுத்திக் காட்டியது.

தமிழர்களோ இப்போது தென்னிந்தியாவில் வாழ்ந்துவரும் தமிழர், தெலுங்கர், கர்நாடகர், கேரளர் முதலியவர்களின் மூதாதைகளாவர். தமிழர்கள் பெரும்பாலும் குட்டையாகவும், கருப்பாகவும் இருந்தனர். அத்துடன் அவர்கள் சப்பை மூக்கு, தடித்த உதடு, சுருண்ட தலைமயிர் முதலிய அங்க லட்சணங்களோடு விளங்கினார்கள்.

நம் தேசம் முழுவதும் பூமத்திய ரேகைக்கு

வடக்கேயுள்ளது. அதுவன்றி, அதன் பெரும் பாகம், உஷ்ண மண்டலத்திலும் சிறுபாகம் சமசீதோஷ்ண மண்டலத்திலும் உள்ளது. கன்னியாகுமரி முனையிலிருந்து, சிந்துநதி முகத்துவாரம் முதற்கொண்டு, கங்காநதி முகத்துவாரம் வரை உஷ்ண மண்டலத்தி லமைந்த பிரதேசமாகும். அதற்கு வடக்கேயுள்ள பிரதேசம் சமசீதோஷ்ண மண்டலத்தில் உள்ளதாகும். உஷ்ண மண்டலத்தில் உள்ள பிரதேசத்தில் வசிக்கும் சுதேசி மக்கள் பெரும்பான்மையாக, கருப்பு நிறம், கபில நிறங்கொண்டவர்களாக இருப்பர்.

இவ்விதம் ஆரியர்களுக்கும், தமிழர்களுக்கும் நிறம், மொழி, பழக்க வழக்கங்கள் மாறுபட்டிருக்கின்றனவே யொழிய, உருவம், தோற்றம் அவ்யவ பேதங்கள், இரத்தம் முதலிய முக்கிய விஷயங்களில் சிறிதும் பேதமில்லை. மக்களின் நிற வேறுபாடுகூட அவர்கள் வசிக்கும் நிலத்தின் இயற்கையை யொட்டியும், சீதோஷ்ண நிலைமைக் கேற்றவாறும் மாறுபட்டிருக்கின்றனவே யொழிய வேறில்லை.

ஆரியர்-தமிழர் என்ற அநாவசியமான வேற்றுமையைப் பற்றி ஆராய வந்த நாம் மற்றொன்றும் இங்கு கவனிக்கவேண்டி யிருக்கிறது. ஆரி

யர் என ஒரு ஜாதி அல்லது சமூகப் பெயர் கிடையாது. உயர்ந்ததென மதிக்கப்படும் ஒரு பயிற்சி அல்லது நாகரிகமுடையார் ஆரியரெனப் பட்டாரென்பதே உண்மை; ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் அநுமானித்தது தவறு என விவேகாநந்த சுவாமிகள், அரவிந்த கோஷ் ஆகிய பெரியார்கள் அபிப்பிராயப்படுகிறார்கள் என்பதையும் வாசகர்களுக்கு அறிவிக்கவேண்டியது அவசியமெனக் கருதுகிறோம்.

இங்கு ஆராயப்பட்ட ஆரியர்-தமிழர் அங்க லட்சணங்களை அளவுகோலாக வைத்துக்கொண்டு இன்று தமிழ் நாட்டிலுள்ள மக்களைப் பார்ப்போம். இவர்களில் ஒருவரையாகிலும், அசல் ஆரியரென்றோ, அசல் தமிழரென்றோ துணிந்து சொல்வதற்குச் சிறிதாயினும் இடமிருக்கிறதா? திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், மதுரை முதலிய இடங்களில் வசிக்கும் மக்களையாகிலும் ஒருவாறு அசல் தமிழரென்று ஒப்புக்கொள்வதற்கு இடமிருக்கிறது. ஏனென்றால், அவர்கள் பண்டைத் தமிழர்களுக்குக் கூறப்பட்ட அங்க லட்சணங்களையும், தோற்றத்தையும் ஏறக்குறைய ஒத்தவர்களாக இருக்கிறார்கள். மற்றப்படி, தென்னிந்தியாவிலுள்ள பெரும்

பான்மையான மக்களை ஆரியரென்றோ, தமிழரென்றோ கூறுவதற்கில்லாதபடி, கலப்புற்றுப் போய் உருவத் தோற்றம், கலை, நாகரிகம், நடையுடை பாவனைகள், பழக்க வழக்கங்களில் ஒற்றுமையுடையவர்களாய்க் காணப்படுகின்றனர். இவ்வித நிலையில், ஸர். பன்னீர்செல்வம் கூறுகிறபடி, தமிழ்நாட்டி லிருப்பவர்களை ஆரியர் இன்னார், தமிழர் இன்னார் என்று எவ்விதம் பிரிவு படுத்தி வேற்றுமை பாராட்டுவதென்று நமக்குப் புலனாகவில்லை.

# 6. தற்காலத் தமிழ் மக்கள்

தற்போது தமிழ் நாட்டில் வாழும் தமிழ ரெனப்படுவோரை—தமிழ் மக்கள் எனக் கூறப் படுபவர்களில்—அசல் தமிழரைக் காணமுடியாது என்று முன் சொன்னோ மல்லவா! அது சிலருக்கு வியப்பை யுண்டுபண்ணலாம். பண்டைத் தமிழ ருக்கும், தற்காலத் தமிழருக்கும் உருவ அமைப்பு நடை யுடை பாவனை முதலியவைகளில் பெரிய வேற்றுமையுண்டு. இதற்கு அடிப்படையான காரண மென்ன? பண்டைத் தமிழருக்கும் மற்ற மக்களுக்கும் நாளடைவில் ஏற்பட்ட கலப்பே இவ்வேறுபாடுகளுக்குரிய காரணமாகு மென் பதை அறியவேண்டும். ஆகவே, **இன்று தமிழர் எனக் கூறப்படும் மக்கள் ஆதியில் வந்த தமிழர், இந்தியாவின் பூர்வ குடிகள், தமிழர் முன்வந்த நாகர், பின்வந்த துரானியர், ஆரியர் முதலிய பல பிரிவினருங் கலந்த ஓர் கலப்பு கூட்டத்தார் ஆவர்.** எனவே, ஸர். பன்னீர்செல்வமோ, அவ ரது கோஷ்டியாரோ நாங்கள்தான் அசல் தமி ழர்கள்; எங்கள் தேகங்களில் ஓடுவது அசல்

தமிழ் இரத்தம்தான் என்று உரிமையோ பெருமையோ கொண்டாடிக்கொள்ள முடியாது.

இவ்விதம், பண்டைத் தமிழ் மக்கள் மற்ற மக்களோடு சேர்ந்து கலப்புற்றுப் போய்விட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை. எவருந் தனித்து வாழ முடியாது. எந்நாட்டு மக்களும் தனி சமூகமாக இருக்க இயலாது. தம் நாட்டைச் சார்ந்துள்ளவர்கள், வெளிநாட்டிலிருந்து குடியேறுபவர்கள் முதலியவர்களோடு சேர்ந்து கலப்புற்றுப் போவது இயற்கை.

இன்று நம் நாட்டில் வாழும் கிறிஸ்தவர்களும், முஸ்லீம் சகோதரர்களும் மற்றும் சமண, புத்த, பாரஸிக முதலிய சமயங்களைச் சேர்ந்த சகோதரர்களும் எல்லாம் யார்? எல்லோரும் ரோமாபுரியி லிருந்தோ, அராபியாவி லிருந்தோ மற்றும் பல இடங்களி லிருந்தோ வந்து குடியேறியவர்களல்லர். ஆதியில் ஒரு சிலரே, வியாபார நிமித்தமோ, தங்கள் சமயக் கொள்கைகளைப் பரவச் செய்யவோ வேறு காரணங்களை முன்னிட்டோ வந்தார்கள். நாளடைவில், நம் நாட்டு மக்களோடு கலந்து, நம் மக்களில் பலரையும் தங்கள் வசமாக்கிக்கொண்டனர். முஸ்லீம், கிறிஸ்தவ சகோதரர்களின் ஆதி விஜயத்தின் கணிதத்தை

யும் இன்றுள்ளவர்களின் பெருந் தொகையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் இந்திய கிறிஸ்து முஸ்லிம்களில் பெரும்பாலோர் குறிப்பாக, தமிழ்க் கிறிஸ்து முஸ்லிம்களில் பெரும்பாலோர் தமிழ்ப் பெருங் குடிமக்களின் சந்ததியார் என்பது தெரிய வரும். ஆகவே இவற்றிலிருந்து தமிழ் மொழியைத் தாய் மொழியாக வுடைய மக்கள் மட்டுந் தான் தமிழர்கள்; பிராம்மணர்கள் தமிழர்களல்லர் என்று கூறும் ஸர். பன்னீர்செல்வத்தின் கூற்று சிறிதும் பொருத்தமாகாது என்னும் உண்மை வாசகர்களுக்குப் புலப்பட்டிருக்குமென நம்புகிறோம்.

## 7. தமிழ் நாடு எது?

இனி, தமிழ் நாடு எது என ஆராய்வோம். 'சென்னைநகரிலிருந்து குமரிவரையில் மலையாளத்திற்குக் கிழக்கே உள்ள நாடே தற்காலத்தில் தமிழ் நாடென்று சந்தேகத்திற்கு இடமில்லாமல் கூறலாம்' என ஸர். பன்னீர்செல்வம் தமிழ் நாட்டின் எல்லையை வரையறுக்கிறார். ஆகவே, நாம் தமிழ் நாட்டின் பண்டைக்கால எல்லையையும், தற்கால எல்லையையும் முறையே கூறவேண்டியது அவசியமெனக் கருதுகிறோம்.

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் நாடு முற்காலத்தில் இப்போதுள்ளதைப் போல் கன்னியாகுமரியோடு முடிவுறாது, தெற்கே பின்னும் நெடுந்தூரம் வரை எட்டியிருந்ததாகத் தெரிகிறது. அக்காலத்தில் குமரி முனைக்குத் தெற்கே பனை நாடு முதலிய நாடுகளும், குமரிக் கோடு மணிமலை முதலிய மலைகளும், முத்தூர், கபாடபுரம் முதலிய ஊர்களும், பஃறுளியாறு, குமரியாறு முதலிய ஆறுகளும் இருந்தனவென்று பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. பிற்

காலத்திலும் இதனை வலியுறுத்தும் ஆதாரங்கள் வெகுவாக உள்ளன.

தொல்காப்பியம் என்னும் ஒப்புயர்வற்ற தமிழ் நூலுக்குப் பாயிரங் கூறவந்த பனம்பாரனார்,

'வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து'

என்று பண்டைக்காலத் தமிழ் நாட்டெல்லையை வகுத்துக் கூறினார். எனவே, தமிழ் நாடு தெற்கே குமரியாறுவரை வியாபித்திருந்தது. குமரியாறு நாம் இப்போது காணும் குமரியினின்று உத்தேசம் இருநூறு மைல் விஸ்தீரணத்திற் குட்பட்ட தூரத்திற்குள் இருந்திருக்கலாம். இவ்விதம் பரவியிருந்த நாட்டைக் கடல்கொண்டு ஒழிந்தது என்பது சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்களில் வரும் வரலாறுகளால் தெரிகிறது.

இங்ஙனம், கடல் கொள்ளப்பட்டதன் பின்னர்த் தமிழ் நாட்டின் எல்லை வடக்கே பழவேற்காடு தொடங்கித் திருவேங்கடம் அல்லது திருப்பதிவரை எட்டி மேல் பக்கம் மலையடுத்துவந்து தெற்கும் கிழக்கும் கடலடுத்து வந்ததென்பது விளங்கும். இதனை, பவணந்தி முனிவர் தாம் இயற்றிய நன்னூலில்,

'குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனு(ம்)நான் கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்'

என்ற சூத்திரத்தின் வாயிலாகத் தற்காலத் தமிழ் நாட்டிற்கு எல்லை கூறியிருக்கிருர். இவற்றி லிருந்து, தமிழ் மொழி முற்காலத்தில் பரவி யிருந்த எலலேயும், தற்காலத்தில் பரவியிருக்கும் எல்லேயும் அறிந்துகொள்ளலாம். இத் தமிழ் மொழியே ஒருகாலத்தில் இந்தியா முழுதும் பரவியிருந்ததென்பது மனேன்மணீயம் நாடக நூலாசிரியர் திரு. சுந்தரம் பிள்ளை எம்.ஏ., முத லிய பேரறிஞர்களது கருத்து. இக் கொள்கைப் படி பார்த்தால்,—ஆரியர் வருமுன் தமிழர்களே இந்தியா வெங்கணும் பரவி யிருந்தார்களென்ற சரித்திர உண்மையையும் ஒத்திட்டு நோக்கினல், ஒருகாலத்தில் இந்தியா முழுதுமே தமிழ் நாடாக இருந்ததென்றும் கொள்ளலாமல்லவா?

# 8. பிராம்மணர் தமிழரா?

இனி, பிராம்மணர் தமிழரா? அல்லரா? என்பதைப்பற்றி விசாரிப்போம். 'தமிழர் யார்?' என்ற விசித்திர பிரச்சினையைக் கிளப்பிய ஸர். பன்னீர்செல்வம் பிராம்மணர் தமிழரா? என்ற அதிநூதன கேள்வியையுந் தாமே வினவி, தமிழராகமாட்டார்கள் என்றும் அதற்குப் பதிலளித்து முடிவு கட்டுகிருர். ஒரு தாய்க்கு அவளது அருமருந்தன்ன மகனைச் சுட்டிக்காட்டி, 'அவன் உன் மகனா?' என்று கேட்டு அதோடு நில்லாமல் 'அவன் உன்னுடைய புதல்வனாக மாட்டான்' என்று தீர்மானமாகக் கூறினால் எப்படி யிருக்குமோ அவ்வித விசித்திர நிலைமையே, பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக நம் நாட்டில் வாழ்ந்து நம்மோடு உறவாடி, நம் மொழியையே தாய் மொழியாகக் கொண்டு பேசிவரும் பிராம்மண சகோதரர்களைச் சுட்டிக்காட்டி, 'இவர்கள் தமிழர் ஆவார்களா? ஆகமாட்டார்கள்' என்று முடிவுகட்டுவதும் பொருந்தும். பிராம்மணர்கள் தமிழர் ஆகமாட்டார்கள் என்பதற்கு ஸர். பன்

னீர்செல்வம் எடுத்துக்காட்டிய காரணத்தை நாம் முன்னரே கூறியிருக்கிறோம்.

இவர் எடுத்துக்காட்டி யிருக்கிறபடி, பிராம் மண சகோதரர்களில் ஒரு சிலர் பெருமித மனோ பாவங் கொண்டவர்களா யிருக்கலாம். தாங் களே மேல் வகுப்பினரென்றும், தங்கள் சொந்த மொழி சமஸ்கிருதமேயென்றும் கூறிக்கொள்ளும் சிலரை நாம் பார்த்தும் வருகிறோம். இதற்காக, பிராம்மண சமூகத்தையே மேற்படி குற்றச் சாட்டுக்கு ஆட்படுத்த முயல்வது சரியல்ல. பிராம்மணர்களில் ஒரு சிலர் மட்டுமல்ல; தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு வகுப்பாரிலும் மேற் குறித்த பெருமித மனோபாவங் கொண்டவர்கள் பலரிருக்கின்றனர். ஒவ்வொரு வகுப்பினரும் தாங்கள்தான் மற்ற மக்களைவிட உயர்ந்தவர்கள்; தாங்கள் மற்றவர்களோடு உண்ணல் கலத்தல் வைத்துக்கொள்வது தகாது என்று கருதுவ தோடு, தங்களை ஒரு தனிப்பட்ட வகுப்பினரா கவே வைத்துக்கொள்ள முயன்று வருகின்றனர். மற்றும் பலர் தங்கள் தாய் மொழியாகிய தமி ழைப் படிப்பது கேவலமென்றும், அது எவ்விதப் பிரயோசனத்தையுந் தராதென்றும், சமஸ் கிருதத்தைப் படிப்பதுதான்—அதை நன்றாகப்

படிக்கத் தெரியாவிடினும், படித்த மகா பண்டிதர்போல் பாவனை செய்வதுதான்—கௌரவம் என்றும், சமஸ்கிருதம் படித்த தங்களை உயர்ந்தவர்களென மற்றவர்கள் எண்ணுவார்களென்றும் கருதி நடந்து வருகின்றனர். இன்னும் சில பெரியார்கள், 'தமிழ்மொழியிலுள்ள அரிய பெரிய நூல்களெல்லாம் முதனூல்களல்ல; சமஸ்கிருத மொழியிலுள்ள நூல்களின் மொழி பெயர்ப்பே' என்று கூறி வாதாடி வந்திருக்கின்றனர். தமிழ் மொழிக்கே தனி உரிமையும் சிறப்பும் வாய்ந்த திருக்குறள், சிவஞானபோதம் போன்ற நூல்களைக்கூட, சமஸ்கிருதத்திலுள்ள மனுஸ்மிருதி முதலிய நூல்களைத் தழுவி எழுதப்பட்ட சார்பு நூல்கள் எனக் கூறிச் சாதிக்க முயலும் மகா பண்டிதர்களும் நம்மில் பலர் இருக்கின்றனர் என்பதை ஸர். பன்னீர்செல்வம் அறிய வேண்டும். அநுஷ்டானத்திலும் நடையுடை பாவனைகளிலும் வைதீகப் பிராம்மணர்களைப் பின்பற்றி யொழுகி அவர்களினும் தங்களை மேலானவர்களாகக் காட்டிக்கொள்ள முயன்று, சமஸ்கிருதத்தைத் தங்கள் தாய்மொழிபோல பாராட்டி வரும் சில வகுப்பாரைப்பற்றி நாம் சொல்லுவதில் நம்பிக்கை வைக்காவிட்டால், சுவாமி வேதா

சலம், உயர்திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை எம்.ஏ., எம்.எல்., முதலிய தமிழ்ப் பேரறிஞர்கள் எழுதியுள்ள நூல்களையாவது படித்துப் பார்க்கும் படி கேட்டுக்கொள்ளுகிறோம்; அல்லது அவர்களை யாவது நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளும்படி யோசனை கூறுகிறோம். எனவே, தங்களை மேல் வகுப்பார் எனக் கூறிக்கொள்வதற்காகவும், சமஸ் கிருதத்தைத் தங்கள் சொந்த மொழி என்று கொண்டு தமிழை இழிவுபடுத்துவதற்காகவும் பிராம்மணர்களைத் தமிழரென அழைப்பது பொருத்தமில்லையானால், மேற்குறித்த மனோபாவ முள்ள மற்ற வகுப்பாரையும் தமிழரென அழைப் பது பொருத்தமாகாது என்றே கூறுவோம். ஆரியர் இங்கு வந்தபின் உண்டாக்கிய வருணாசிர மத் தருமத்தாலோ அல்லது சுயநல மனிதனின் மூளைக் கோளாறினாலோ ஏற்பட்ட உயர் தாழ்வு மனோபாவம், சாதிப் பிரிவு, சமயப் பிரிவு, மூடப் பழக்க வழக்கங்கள், அர்த்தமற்ற ஆசார அநுஷ் டானங்கள் முதலிவைகளை மனித சமூகத்தி லிருந்து போக்குவதற்கு முயலவேண்டுமே யொழிய, அரசியல் காரணமாகவோ வேறெக் காரணமாகவோ ஏற்பட்ட துவேஷ மனப்பான் மையினால் பழி தீர்த்துக்கொள்ளும் நோக்கத்

தோடு ஒரு குறிப்பிட்ட வகுப்பாரைமட்டும் மேற்குறித்த காரணங்களைக் காட்டித் தமிழரல்லரென ஒதுக்கித் தள்ளுவது அறிவுடைமையாகாது; நியாயமுமாகாது.

ஆதியிலிருந்து பிராம்மணப் பெரியார்களில் பலர் தமிழ் மொழியை வளர்த்து வந்திருக்கிறார்கள். முதல் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கங்களில் பிராம்மணர் பலர் புலவர்களாக இருந்து தமிழ்த்தொண்டு புரிந்திருக்கின்றனர். அகநானூறு, புறநானூறு, பரிபாடல் முதலிய சங்க நூல்களான பத்துப் பாட்டு, எட்டுத் தொகை முதலியவைகளிலும் பதினெண்கீழ் கணக்கிலும் பல பாடல்களையும் நூல்களையும் பிராம்மணப் புலவர்கள் இயற்றி யிருக்கின்றனர். இடைக்காலத்தில் ஏற்பட்ட புராணம், இதிகாசம், காவியங்களில் பலவற்றை எழுதிய பெரியார்களில் பிராம்மணர்களும் பலர் இருக்கிறார்களென்பதைக் காட்ட முடியும். அவ்வளவு ஏன்? தேவாரம், திருவாசகம் முதலிய சைவத் திருமுறைகளையும், நாலாயிரந் திவ்விய பிரபந்தங்களையும் பாடிய சமயாசாரியார்களில் திருஞானசம்பந்த சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், பெரியாழ்வார், ஆண்

டாள் (சூடிக்கொடுத்த நாச்சியார்) முதலியவர்களெல்லாம் பிராம்மணர்கள் என்பதை யாரேனும் மறுக்க முடியுமா? பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்ருண்டுகளில்கூட, பல பிராம்மணர்கள் குறுநில மன்னர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் சமஸ்தான வித்வான்களாக இருந்து தமிழை வளர்த்து வந்திருக்கிருர்கள். தற்காலத்தில் சேது சமஸ்தான வித்வான் ரா. இராகவையங்கார், மஹாமகோபாத்தியாய - சாமிநாத ஐயர், மு. இராகவையங்கார் முதலிய பிராம்மணப் பெரியார்கள் தமிழ்ப் புலவர்களாக இருந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கான ஆக்க வேலையைச் செய்து வருகிருர்கள். ஓலைச் சுவடியிலிருந்த சங்க நூல்களையும், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காவியங்களையும் கரையானுக்கு இரையாகாமல் பாதுகாத்துக் கொண்டுவந்து ஆராய்ந்து அச்சில் பதிற்பித்து புத்தகமாகத் தமிழ் மக்களுக்குத் தந்துவரும் உயர்திரு. சாமிநாத ஐயர் அவர்களைப் பிராம்மணர் என்ற காரணத்தால் தமிழரல்லரெனத் தள்ளிவிட முடியுமா? சங்க நூல்களிலும், கம்பராமாயணம் முதலிய காவியங்களிலும் காணப்படும் கவி நயங்களையும், பொருள் விழுப்பத்தையும் படித்துணர்ந்து நூல்

வாயிலாகவும், சொற்பொழிவு மூலமாகவும் அழகாக எடுத்துக்கூறி மகிழும் உயர்திரு. இராகவையங்கார் அவர்களை எப்படித் தமிழரல்லரென்று கூற முடியும்?

தமிழ் உரை நடையில் நவீன முறையையொட்டி மறுமலர்ச்சியை உண்டுபண்ண முயன்ற திரு. வ. வே. சு. ஐயர், திரு. சுப்பிரமணியபாரதி, திரு. அ. மாதவையா, திரு. ராஜமையர் ஆகியோரெல்லாம் பிராம்மணப் பெரியார்களல்லவா? அவர்களையெல்லாம் தமிழரல்லரென்று கூறியொதுக்க நம் மனம் எவ்விதந் துணியும்?

இவ்விதம் பல்லாண்டுகளாக நம் நாட்டிலேயே வாழ்ந்து நம்முடன் உறவாடி நம் மொழியைத் தம் மொழியைக்கொண்டு வளர்த்துவரும் பிராம்மணச் சகோதரர்களைத் தமிழர்களல்லவென்று கூறுவது சிறிதாயினும் நியாயமா?

இப்போது நம் நாட்டில் நம்முடன் வாழும் பிராம்மண வகுப்பார் முன்னர் இங்கு வந்து குடியேறிய ஆரியர்களுடைய சந்ததியாரே என ஸர். பன்னீர்செல்வம் கூறுவதை உண்மையென்றே விவகாரத்துக்கு வைத்துக்கொள்வோம். அவர்கள் தமிழ் நாட்டிலோ மற்ற மக்களோடு கலவாமல் அப்படியே தனித்து வாழ்ந்து

வந்தார்கள் என்று கூற முடியுமா? அப்படி ஒரு சமூகம், தன்னை யடுத்துள்ள மற்ற சமூகத்தோடு கலவாது வாழ்ந்துவருவது அநுபவ சாத்தியமா? பல நூற்றாண்டுகளாக, தமிழ் நாட்டில் வாழ்ந்து வரும் பல சமூகங்களும் காலப்போக்கில் ஒன்றோடொன்று கலந்து போய்விட்டதைச் சரித்திரங்களே தெரிவிக்கும். ஆரியர்கள் குடியேறிய காலத்து, இங்குள்ள தமிழர்களைத் துரத்த முயன்றார்க ளாயினும், பின்னர், அவர்களுடன் ஒற்றுமையாகப்போய் உடன்வாழக் கருதி அவர்களுக்குத் தங்கள் பெண்களைக் கொடுத்தும், அவர்கள் பெண்களைத் தாங்கள் மணந்தும் கொள்ளலாயினர் என்ற உண்மை பண்டைச் சரித்திரங்களில் காணக் கிடக்கிறது.

இவ்விதம் தமிழரும் ஆரியருங் கலந்து ஏற்பட்ட சமூகம் பலவித சாதிகளாகப் பிரிக்கப்பட்ட பின்னர் கூட மேற்குறித்தவாறு கலப்பு ஏற்பட்டிருக்கிறது. வைஷ்ணவ சமயாசாரியாரும், பாஷியகாரருமான ஸ்ரீமத் இராமாநுஜர் காலத்தில் அவர் தாழ்த்தப்பட்டவர் எனக் கருதப்பட்ட பல ஜாதியினரைப் பிராம்மண சமூகத்தில் கலக்கச்செய்து தீட்சையால் பிராம்மணர்களாக்கினர் என்ற வரலாறு பலரறிந்ததாகும்.

ஆரியர் உண்ணல் கலத்தல் முதலியவைகளால் தமிழரோடு ஒன்றுபட்டுப் போய்விட்டாலும், அவர்கள் தங்கள் ஆரிய கலை, நாகரிகம், கடவுள் வழிபாடு, ஆசார அநுஷ்டானங்களையே தினசரி வாழ்க்கையில் புகுத்தி நிலைநிறுத்த முயன்று வருகின்றனர் எனக் கூறப்படுகிறது. இதில் சிறிது உண்மை யிருக்கலாம். ஆனால் முற்றிலும் உண்மையல்ல. ஆதியில் ஆரியர்கள் நாகங்களையும், மேகங்களையும், இந்திரனையும், வருணனையும் இன்னும் அஃறிணை உயர்திணைப் பொருள்களை யெல்லாம் வழிபட்டு வந்தனர். அஸ்வமேத யாகம், புத்திரகாமேஷ்டி யாகம் முதலிய யாகங்களைச் செய்து பசு, ஆடுகளை உயிரோடு வதைத்து வேள்வித் தீயில் சுட்டுப் பொசுக்கித் தின்று வந்தனர். பிள்ளை யில்லை யென்றால், ஒரு பெண் தன் கணவனல்லாத பிற ஆடவர்களோடு (வேறொருவனோடு சேர்ந்தும் பிள்ளை பிறக்கவில்லை யென்றால் மற்றொருவனுடன்—அதாவது ஒருவர் பின்னொருவராய்ப் பதினொரு புருஷர்களுடன்) சேர்ந்து பிள்ளை பெறலாம் என்று 'நியோகம்' என்ற முறையை வகுத்திருந்தனர். இதுபோன்ற இன்னும் பல ஆபாசங்களும் அர்த்தமற்ற கொள்கைகளும், மூடப் பழக்க வழக்கங்களும் கொண்

டிருந்தனர். ஆனால், அவைகளெல்லாம் இப்போது நடை முறையில் இருக்கின்றனவா? நம் நாட்டிலுள்ள பிராம்மணர்கள் இவ்வித முறைகளைக் கைக்கொண்டிருக்கின்றனரா? என்று நாம் ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியாரைக் கேட்கிறோம்.

அதற்குப் பதிலாக, அவர்கள் தமிழர் நாகரிகம், கலை, பழக்க வழக்கங்களைப் பெரிதுங்கொண்டிருக்கிறார்கள் என்பதற்குப் பல சான்றுகள் காட்டக்கூடும். மண விழாவில் தாலி கட்டுதல் முதலியன வெல்லாம் தமிழர் பழக்க வழக்கங்களல்லவா!

இவ்விதம் கலை, நாகரிகம், கடவுள் வழிபாடு, பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகளால் நம்முடன் ஒன்றுபட்டுப் போயிருக்கும் பிராம்மணச் சகோதரர்களைத் தமிழரல்லரென்று பிரிக்க முயல்வது தகுமா? இது முறையா? இது தருமந்தானா?

இந்நிலையில் தமிழ் நாட்டிலுள்ள முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் தமிழர்கள்தான் என ஸர். பன்னீர்செல்வம் கூறுகிறார். தன்மதிப்பியக்கப் பெரியார் ஈ. வே. ரா. அவர்களும், "இந்நாட்டைப் பொறுத்த வரை மேற்கூறிய நாம் எல்லோ

ரும் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள். தொழி லால், பழக்க வழக்கத்தால், மன உணர்ச்சியால் வேறு மதம், வேறு ஜாதி, வேறு வகுப்பாய்க் கருதிக்கொண்டிருக்கிறோம். நம் நாட்டு முஸ் லிம்களும் கிறிஸ்தவர்களும் திராவிடர்களே யாவார்கள். தாழ்த்தப்பட்ட மக்களும் திரா விடர்களேயாவார்கள். மத விஷயத்தில் மன மாற்றங் கொண்டவர்கள் பிறவியில் நம் சகோ தரர்கள்தான். ஆதலால் நம் நான்கு கூட்டத்தா ரிடையும் சிறிதுகூட வேற்றுமை யுணர்ச்சி யிருக் கக்கூடாது" என்று ஜஸ்டிஸ் மகா நாட்டுத் தலை மைப் பேருரையில் குறிப்பிட்டிருக்கிறார். அரேபி யாவிலிருந்து வந்த முஸ்லிம்களும், ரோமிலிருந்து வந்த கிறிஸ்தவர்களும் தமிழர்களாகும்போது, பிராம்மணர்கள்மட்டும் ஏன் தமிழராகக்கூடாது என நமக்குத் தெரிய வில்லை. தற்போதுள்ள முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் தமிழர்கள் தான்; நம் சகோதரர்கள்தான் என்று வலியுறுத் துவதற்கு பெரியார் ஈ. வே. ரா. என்னென்ன காரணங்கள் கூறுகிறாரோ, அந்தக் காரணங்க ளெல்லாம் பிராம்மணர்களுக்கு மட்டும் ஏன் பொருந்தாது? முஸ்லிம் கிறிஸ்தவர்களது ஆதி விஜயத்தின் கணிதத்தையும், இன்றுள்ள முஸ்லிம்

கிறிஸ்தவர்களின் பெருந் தொகையையும் ஒப் பிட்டுப் பார்த்தால் இந்திய முஸ்லிம் கிறிஸ்தவர் களில் பெரும்பாலோர் தமிழ்ப் பெருங்குடி மக்க ளின் சந்ததியார் என்பது தெரியவரும் என முன் னமே குறிப்பிட்டிருக்கிறோம். அதுபோலவே தான், பிராம்மணர்கள் பெரும்பாலோர் மட்டு மல்ல; அனைவருமே தமிழ்ப் பெருங்குடி மக்க ளின் சந்ததியாராவர். தற்போதைய கிறிஸ்தவ முஸ்லிம்கள் நம்மவர்களா யிருப்பினும், தங்கள் மூதாதைகளின் மதக் கொள்கைகளையும், நடை யுடை பாவனைகளையும் பழக்க வழக்கங்களையுமே உடையவர்களாப் நம்மினும் வேறுபட்டவர்கள் என்பதைக் காட்டிக் கொள்கின்றனர். ஆனால், ஆரியர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்களெனக் குற்றஞ் சாட்டப் படுகிற பிராம்மணர்களோ சமயக் கொள்கை, கலை, நாகரிகம், நடை யுடை பாவனை, பழக்க வழக்கங்கள் முதலியவைக ளில் நம்மைப் போலவே காணப்படுகின்றனர். ஆகவே, ஸர். பன்னீர்செல்வம் பிராம்மணர்கள் தமிழர்களாக மாட்டார்கள் என்பதற்குக் கூறிய காரணங்கள் கிறிஸ்தவ முஸ்லிம் சகோதரர் களுக்கு ஒரு வேளை பொருந்துமே யொழிய, பிராம்மணர்களுக்குச் சிறிதும் பொருந்தாது.

ஜட்கா வண்டி யோட்டும் சாயபு, தறி நெய்யும் லெப்பைகூடத் தான் அசல் அராபிய னென்றும், தனது மதமும், சமூகப் பழக்க வழக்கங்களுமே சிறந்த தென்றும், தன்னுடன் வாழும் தன் போன்றவர்களுக்கு இடமளித்திருக்கும் தமிழன் தன்னினுந் தாழ்ந்தவன்; தனக்கு முற்றும் வேறு பட்டவன் எனக் கருதுகிறானே யொழிய, தமிழ் நாடு தனது தாய் நாடு என்றும், தமிழன் தனது சகோதரன் என்றும் எண்ணுவதே யில்லை. இது போன்றே சாதாரண ஏழைக் கிறிஸ்தவன் நேற்று வரை பறைச்சேரி முனியனாக விருந்து பாதிரி சுவாமியாரின் கருணா கடாட்சத்தால் ஞானஸ்நானஞ் செய்யப்பட்டு அந்தோனிசாமியாக மாறிய ஒருவனுங்கூட தன்னைச் சீமையிலிருந்து —ரோமாபுரியிலிருந்து அப்போதுதான் கப்பலை விட் டிறங்கிய துரைமாதிரி நினைத்துக்கொண்டு (சிலர் போப்பரசரின் மறு அவதார மென்றுகூட தங்களை நினைத்துக்கொள்ளுகிறார்கள்) ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் தாங்கள் தமிழரி னின்றும் முற்றிலும் வேறுபட்டவர்கள் என்பதைக் காட்டிக்கொள்வதோடு, தாங்கள் இந் நாட்டை ஆள்வோரின் வார்சுகள் என்றும் எண்ணிப் பெருமிதத்தோடு நடந்துகொள்ளுகிறார்கள். இவ்வித

மெல்லாம் இருந்தாலுங்கூட நாம் அவர்களை யெல்லாம் நம் சகோதரர்க ளென்றே எண்ணி அன்பாகவே நேசித்து உறவாடி வருகிறோம். இவ்விதம் நம்மைக் 'காபிர்' என்று இழித்துக் கூறும் முஸ்லிம் சகோதரர்களையும், 'அஞ்ஞானி கள், பாபிகள்' எனக் கேவலப் பட்டம் சூட்டி அழைக்கும் கிறிஸ்தவ சகோதரர்களையும்கூட தமிழர்களென ஒப்புக்கொள்ளும்போது, மொழி ஒற்றமை, எண்ண ஒற்றுமை, நாட்டுக் கதை, பழ மொழி பழக்க வழக்கம் இவைகளில் ஒற்றுமை, உடலில் அங்க அமைப்பில் ஒற்றுமை இவைக ளெல்லாம் நம்மோடு முற்றும் பொருந்தி யிருக் கும் பிராம்மண சகோதரர்களை மட்டும் தமிழர்க ளல்லர் என்று கூறி ஒதுக்க முயல்வது நியா யமா? என்றே கேட்கிறோம்.

பிராம்மண சகோதரர்களிடம் ஸர். பன்னீர் செல்வம் கோஷ்டியார் விரோத பாவம் பாராட் டும் போக்கை கவனிக்கும்போது, நமக்கு ஆட்டுக் குட்டு ஓநாய் கதை ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு ஆற்றில் கீழ்க் கரையில் ஆட்டிக்குட்டியும், மேல் கரையில் ஓநாயும் இருந்து நீரருந்திக் கொண்டிருந்தன. ஓநாய் கண்ணில் தற்செய லாக ஆட்டுக்குட்டி படவும் அதன் நாக்கில் நீர்

ஊறியது. எனவே உடனே ஆரம்பித்தது கலகத் துக்கு. 'ஏய்! நீரை ஏன் கலக்குகிருய்?' என்று ஓநாய் அதட்டியது. ஆட்டுக்குட்டி பயந்துபோய் பணிவாக, 'நான் கீழ்க் கரையில்தானே இருக் கிறேன்; எப்படி நீரைக் கலக்க முடியும்? நீங்கள் குடித்து கலக்கும் நீர்தான் என் பக்கம் வருகிறது' என்று கூறியது. ஓநாய் யோசித்தது. வேறு பழியை அதன்மீது சுமத்த முயன்றது. 'ஐயோ! நான் செய்யவில்லையே! எனக்கு இப்போது தானே ஒன்றரை வயசாகிறது. நான் அதை எப்படி செய்திருக்க முடியும்?' என்று விநயமாகக் கேட்டது ஆட்டுக்குட்டி. ஓநாய்க்கு இப்பதில் ஒருபுறந் திகைப்பையும், மற்ருெரு புறம் ஆத்தி ரத்தையும் உண்டுபண்ணியது. 'அப்படியா! நீ செய்தில்லா விட்டால், உன் அப்பன், அல்லது உன் பாட்டன் பூட்டன் செய்திருப்பான்; ஆத லால், உன்னை விடமாட்டேன். அவர்களுக்குப் பதிலாக நீதான் தண்டனையை அனுபவிக்க வேண்டும்' என்று கூறி அவ்வேழை ஆட்டுக் குட்டி மீது பாய்ந்து கொன்று தின்றது.

அதுபோல, எக்காலத்திலோ நம் நாட்டுக்கு வந்து நமக்கு என்னவோ பாதகம் விளைத்தார்க ளென்றும், நமது கலை, நாகரிக முதலியவைகளைக்

கெடுத்துவிட்டார்களென்றும் எண்ணிக்கொண்டு அந்த ஆரியர்களின் சந்ததியார்தான் பிராம் மணர்கள்; ஆதலால் அவர்களும் ஏதாயினும் செய்துவிடக்கூடும் எனக் கருதி அவர்களிடம் விரோதபாவம் பாராட்டிப் பழிதீர்த்துக்கொள்ள ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியார் முயல்வதாக அவர்களது போக்கிலிருந்து தெரிகிறது. இது சரியான மனப்பான்மையல்ல; இது நியாய மல்ல என்றுதான் நாம் கூறக்கூடும்.

எனவே, எவ்வகையாகப் பார்த்தாலும் பிராம் மண சகோதரர்கள் தமிழர்களல்லர் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை என்றும் நன்கு தெரி கிறது. ஆகவே, பிராம்மணர்கள் தமிழர்களே; நடை முறையில் வழக்க பழக்கங்களில் சிறு சிறு வித்தியாசங்கள் காணப்படினும் (நம்மில் பல வகுப்பாரிடையும்கூட இவ்விதச் சிறுசிறு வேற்று மைகள் காணப்படுகின்றன வாதலால் அது கொண்டு தமிழரல்லவெனத் தள்ளமுடியாது) நம் சகோதரர்களே என்பதில் யாதொரு சந் தேகமுமில்லை. ஸர். பன்னீர்செல்வம் பிராம் மணர்கள் தமிழராகமாட்டார்கள் என்று முடிவு கூறினும், நாம் தமிழர்களே என உறுதியாகக் கூறுவோம்.

ஸர். பன்னீர்செல்வம் கூறுவதுபோல், பிராம்மணர்கள் ஆரியர்களே என்று ஒப்புக்கொண்டாலும், பல நூற்றாண்டுகளாக நம் தமிழ் நாட்டில் வாழ்ந்து வருகிறார்களே; அதற்காகவாயினும், அவர்கள் தங்களைத் தமிழர்களெனக் கூறிக் கொள்ள உரிமையில்லையா? என்று கேட்கிறோம். ஒரு தேசத்தின் பிரஜை என்ற உரிமை (Nationalisation right)க்கு எத்தனை வருடம் வேண்டுமோ, அவ்வளவு வருடங்களையுங் கடந்து நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக—தலைமுறை தலைமுறையாக பிராம்மணர்கள் வாழ்ந்து வருகிறார்கள்; ஆதலால், அவர்களைத் தமிழ் நாட்டினரல்லர்; தமிழரல்லர் என்று கூறுவதற்கு ஸர். பன்னீர்செல்வம், பெரியார் ஈ. வே. ரா. கோஷ்டியாருக்கு மட்டுமல்ல; வேறு யாருக்குமே உரிமை கிடையாது எனத் திண்ணமாகக் கூறுவோம்.

வெளிநாட்டிலிருந்து நம் நாட்டில் குடியேறிய பிராம்மணர்கள் எவ்வளவு காலங்களுக்குமுன் நம்மிடம் வந்து சேர்ந்தவர்க ளாயினும், இந்நாட்டிலேயே எப்போதும் இருக்கும் நோக்கத்துடன் உள்ளவர்களாயினும், நம் நாட்டின்மீதோ நம் மக்கள்மீதோ பற்றில்லாது வேறு சார்புடை

யரா யிருப்பதால், அவர்களை ஜெர்மனியில் ஹிட்லர் கோஷ்டியாரான நாஜிகள் யூதர்களை விரட்டி யடிப்பதுபோல், துரத்தியடிக்க வேண்டுமென்று ஒரு சிலர் கூறுகின்றனர்.

"ஹிட்லர் ஜெர்மன் யூதர்களிடம் கொண்டுள்ள மனப்பான்மைக்குரிய காரணங்கள் என்னென்னவென்று அவர் சொல்லுகின்றாரோ அவைகளும், அவைகளுக்கு மேற்பட்ட காரணங்களுமே இங்கே நம் மாபெருந் தலைவர்கள் இவ்வியக்கத்தை (ஜஸ்டிஸ் கட்சியை) ஆரம்பித்ததற்குக் காரணங்களா யிருந்தன" என்று பெரியார் ஈ. வே. ரா. வும் கூறுகிறார்.

இது சிறிதும் பொருந்தாது. ஜெர்மன் யூதர் நிலைமை வேறு; இங்குள்ள பிராம்மணர் நிலைமை வேறு. ஏசுகிறிஸ்து பெருமானை யூத வகுப்பினரில் சிலர் காட்டிக்கொடுத்து அவரைச் சிலுவையில் அறைவதற்குக் காரணஸ்தர்களா யிருந்தார்களென்ற காரணத்தால் வெகு காலமாகவே, கிறிஸ்தவர்களாயுள்ள ஐரோப்பியரெல்லாம் யூதர்களை வெறுத்து வருகின்றனர். அக்காரணத்தோடு ஜெர்மனியில் ஆரியர்களான நாஜி வகுப்பார் தவிர பிறர் இருக்கக்கூடாதென்ற வெறி (இங்குள்ள நம்மவர்களில் சிலருக்கு ஆரியர்களை

விரட்டி யடிக்க வேண்டுமென்ற வெறி ஏற்பட்ருப்பதுபோல்) ஹிட்லருக்கு அதிகமாய் விட்டபடியால், யூதர்களை வேட்டையாடி விரட்டச்செய்து வருகிறார். அத்துடன், மற்றொரு காரணமுங் கூறப்படுகிறது. ஜெர்மனியிலுள்ள யூதர்களில் பலர் பெரும் பணக்காரர்களா யிருந்துவருகின்றனர். செல்வாக்கும் செல்வமும் உள்ளவர்கள் மீது மற்றவர்கள் பொறாமைகொள்வது இயல்பு. இத்துடனில்லாது, யூதர்கள் ஜெர்மனியில் தாங்கள் சேமிக்கும் பணத்தையெல்லாம் சேர்த்து அவ்வப்போது வெளிநாடுகளிலுள்ள தங்கள் உறவினர்க்கு அனுப்பி விடுவதாகவும், தாங்கள் அந்நாட்டில் வாழும் பிரஜைகளென்ற முறையில் தேசப்பற்று கொண்டு நடந்துகொள்வதில்லையெனவும் அவர்கள்மீது புகார் கூறப்படுகிறது. இப்புகார் உண்மையானால், நாஜிகள் யூதர்கள் மீது ஆத்திரங் கொள்வதற்கு ஓரளவு நியாயமிருக்கிறது என ஒப்புக்கொள்ளலாம். ஆனால் நம் நாட்டில் வாழும் பிராம்மணர்கள்மீது இவ்விதக் குற்றங்கூட சாட்டுவதற்கு இடமில்லையே! அவர்கள் சம்பாதிக்கும் பொருள்களையும் சொத்துகளையும் வெளி நாட்டுக்கு எங்கும் அனுப்பி விடுவதில்லை. அவர்களுடைய சொந்த தேச

மென்று கூறுவதற்குத் தமிழ் நாட்டைத் தவிர வேறு தேசங் கிடையாது. அவர்கள் சம்பாதிக்கும் பணம், சொத்தெல்லாம் நம்மிடையே தான் புழங்குகின்றன. நம் மக்களுக்குத்தான் பயன்படுகின்றன. நம் நாட்டுச் சொத்தாகத் தான் இருந்துவருகின்றன.

பிராம்மணர்கள் ஆரியர்கள்; வட நாட்டிலுள்ளவர்களோடு பெரிதும் சம்பந்தமுடையவர்கள் என்றெல்லாம் ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியார் கூறுகிறார்களே யொழிய, வட நாட்டிலுள்ளவர்கள் யாரும் இதை ஒப்புக்கொள்வதில்லை. தமிழ் நாட்டுப் பிராம்மணர்களைத் தமிழர்களென்றே வெளிநாட்டார் கருதுகின்றனர். இப்போது சென்னைப் பிரதம மந்திரியாக இருந்துவரும் கனம் ச. இராஜகோபாலாசாரியாரையும், திரு. எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்காரையும், திரு. எஸ். சத்தியமூர்த்தி ஐயரையும், நமக்கு மிகச் சமீபத்திலுள்ள ஆந்திரர் முதல் வட இந்தியர்வரை அனைவரும் தமிழரென்று பாவித்து வருகிறார்களே யொழிய, தங்களைச் சேர்ந்தவர்களென்று எவரும் கூறுவதில்லை. வட நாட்டுப் பிராம்மணர்களுக்கும், நம் நாட்டுப் பிராம்மணர்களுக்கும் சிறிதும் சம்பந்தமே யில்லை. அவர்களது நாகரி

கம் நடை யுடை பாவனைகள் வேறாக இருக்கின்றன; இவர்களுடைய நாகரிகம் நடை யுடை பாவனைகள் வேறாக இருக்கின்றன. இவ்வேறுபட்ட நிலைமையை—தமிழ் நாட்டுப் பிராம்மணர்களுக்கும் வட நாட்டுப் பிராம்மணர்களுக்கும் சிறிதுந் தொடர்பில்லை என்பதை—பிராம்மணர் ஆரியர் எனவே வழக்காடும் சுவாமி வேதாசலம் முதலியவர்கள்கூட ஒப்புக்கொண்டு எழுதியும் பேசியும் வருகின்றனர். ஆகவே, இவ்வகையாகப் பல விதத்திலும் தமிழரினின்றும் பிரிக்கமுடியாதவர்களாய் தமிழரேயாய் தமிழ் நாட்டைத் தாய் நாடாகவும், தமிழ் மொழியைத் தாய் மொழியாகவுங் கொண் டொழுகி நம்முடன் இரண்டறக் கலந்து வாழ்ந்துவரும் பிராம்மணர்களைத் தமிழரல்லரெனக் கூறுவதற்கு ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியார்க்கு எவ்விதம் மனந் துணிந்ததெனத் தெரியவில்லை.

தமிழர்களாகவே உள்ள பிராம்மணர்களைப் பழங் கதை கூறி ஆரியரென அழிவழக்கு பேசுவது அநியாயம்; அவர்களை இந்நாட்டைவிட்டுப் போகும்படி கூறுவது பொருத்தமல்லவென்று புலப்பட்டுத்தான் போலும், ஸர். பன்னீர்செல்வம் சென்னை மாநிலத் தமிழர் மாநாட்

டிற்குப் பிறகு நடந்த சென்னை ஜஸ்டிஸ் மாநாட்டில், தம் தவறைத் திருத்திக்கொண்டு பேசியிருக்கிறார். அதாவது, "நாம் பிராம்மணர்களை இந்நாட்டை விட்டு வெளியேறச் சொல்லவில்லை. அவர்கள் நம்முடன் பல வருடங்களாக இருந்து வந்திருக்கின்றனர். நம் முன்னோர் அவர்களை வரவேற்று உபசரித்து வந்திருக்கின்றனர். எவ்வளவோ உதவிகள், வசதிகள் அளித்து வந்திருக்கின்றனர். அவ்வுதவிகளைக் கொண்டு சந்தோஷமாக வாழட்டும். அந்த சலுகைகளைக் கொண்டு மிருகத்தனமாக நடக்க அவர்கள் முன் வருவார்களேயானால், திராவிடர்கள் தக்க பாடம் கற்பிக்காமல் போகார்கள்" என்பதாகும். இவ்வாறு கூறியாயினும் பிராம்மணர்களை நம் நாட்டில் இருக்கும்படி கருணைகூர்ந்து அநுமதி தந்தாரே; அந்த அளவில், ஸர். பன்னீர்செல்வத்துக்கு நாம் வந்தனஞ் செலுத்துகிறோம்.

## 9. தமிழர் இந்தியரா?

இனி, தமிழர்களாகிய நாம் இந்தியரா? அல்லவா? என்பதை ஆராய்வோம். ஏனென்றால், ஸர். பன்னீர்செல்வம் தமிழர்கள் இந்தியர்களாக மாட்டார்கள் என்று முடிவு கூறி யிருக்கிறார். "........இன்னும் ஆழ்ந்து பார்ப்போமானால் திராவிட மக்களாகிய நாம் இந்தியர்கள் அல்லவென்றே சொல்லவேண்டும். இந்தியர் என்று ஒரு பதம் ஏற்படுவதற்கே காரணம் நம் நாட்டிலிருந்து ஆயிரம் மைல்களுக்கு மேற்பட்ட தூரத்திலுள்ள பாஞ்சால தேசத்தில் ஓடும் இந்தஸ் நதியே. அந்த நதியின் பெயர் இந்தஸ் என்று இருந்தபடியால், அதை அடுத்தாற்போல் உள்ள நாட்டிற்கு இந்தியா வென்றும் பெயர் வழங்கப் பட்டது. அந்நாட்டில் குடியேறி யிருந்த மக்கள் கிழக்கே போகப்போக அந்தப் பெயரும் அவர்களுடனே நகர்ந்து சென்றது. ஆகவே, காலக்கிரமத்தில் விந்தியமலைத் தொடருக்கு வடக்கேயுள்ள நிலப் பிரிவு முழுவதிலும் இந்தப் பெயர் வழக்கத்தில் வந்தது. **அம்மக்களின் ஆதிக்கத்தின்கீழ் ஒருகாலும் வராத நம் நாட்டிற்கு அது**

பொருத்தமாகாது” என்று தமது முடிவுக்குரிய காரணத்தை வெளியிட்டிருக்கிறார்.

வட நாடும் தென்னுடும் உள்ளிட்ட பாரத தேசத்துக்கு இந்தியா என்ற பெயர் எப்படி வந்தது? யாரால் இப்பெயர் வைக்கப்பட்டது? என்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை; நாம் அதைப் பற்றி ஆராய வேண்டியதுமில்லை. ஸர். பன்னீர் செல்வம் அதற்கு என்னவாயினும் காரணஞ் சொல்லிவிட்டுப் போகட்டும். எப்படியோ கன்னியாகுமரி முதல் இமயமலை வரையுள்ள நிலப் பரப்புக்கு இந்தியா என்ற பொதுப் பெயர் ஏற்பட்டுப் பல்லாண்டுகளாய்விட்டன. ஸர். பன்னீர் செல்வம் கூறுகிறபடி, ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள மேல் நாட்டார்கள் ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்குமுள்ள வித்தியாசங்களை அறியாமல் இமயமலைத் தொடருக்குத் தெற்கிலுள்ள நாடு முழுமைக்கும் இந்தியாவென்று ஒரு பொதுப் பெயரைக் கொடுத்து அப்பெயர் இப்போது நம் நாட்டிற்கும் வழங்கப்பட்டுவிட்டிருக்கலாம். அதனுல் ஒன்றுங் குடிமுழுகிப் போய்விடவில்லை.

பல்லாண்டுகளாக உலகில் வழங்கப்பட்டுப் போன ஒரு பெயரை நீக்கிவிடவோ, மாற்றி

விட்டு வேறு பெயர் வைக்கவோ முயல்வது அவ்வளவு எளிதான காரியமுமன்று; அறிவுடைமையு மாகாது. அத்துடன், இந்தியா என்ற பெயர் கேவலத்தன்மையைக் குறிக்கக்கூடிய தொன்றல்லவே! வடக்கேயுள்ள மக்களின் ஆதிக்கத்தின் கீழ் ஒருகாலும் வராத நம் நாட்டுக்கு இந்தியா என்ற பெயர் பொருத்தமாகாது என்று ஸர். பன்னீர்செல்வம் கூறுவது எவ்விதம் பொருந்து மென்று நமக்கு விளங்கவில்லை.

இப்போதிருக்கும் வட நாட்டு மக்களின் ஆதிக்கத்தின் கீழ் ஒருகாலும் வராத நம் நாட்டுக்கு இந்தியா என்ற பெயர் பொருத்தமில்லை என்றே நாம் ஒப்புக்கொண்டாலும், நாம் முன் ஆராய்ந்த படி, நமது முன்னோர்களான தமிழ் மக்கள் மத்திய ஆசியாவிலிருந்து முதன் முதலாக வட நாட்டிலேயே குடியேறி வெகு காலம் வரை வாழ்ந்தனர் என்பதும், ஆரியர்கள் வந்து துரத்தி யடித்த பிறகே நம் முன்னோர் தென்னாட்டிற்கு வந்து குடியேறினர் என்பதும், நமது முன்னோர்களின் சந்ததியார் இன்னமும் வட நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் ஆகிய உண்மைகளைக் கவனிக்கும்போது, நமது தென்னாடும் சேர்ந்து இந்தியா என்று அழைக்கப்படு

வது மிகப் பொருத்தமானதென்றும், தமிழர்களாகிய நாமெல்லாம் இந்தியர் என்று அழைக்கப்படுவதற்கு உரியவர்களே யென்றும் நன்கு விளங்கும். நம் முன்னோர் தென்னாட்டில் நிலைத்து வாழத் தலைப்பட்ட பின்னர், அவர்களுக்கு அரசர்களாக விளங்கிய சேர சோழ பாண்டியர்களில் சில வீரத் தமிழ் மன்னர்கள் தமிழ் நாட்டில் மட்டுமன்றி வட நாடு முழுதும் தங்கள் ஆட்சியைப் பரவச்செய்தனர் என்பதைச் சரித்திராசிரியர்கள் கூறும் வரலாறுகளால் அறிகிறோம். சோழ மன்னரில் ராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பது போன்ற அரசர்களின் பெயர்களும், சேர மன்னரில் வானவரம்பன் ஆதன், இமயவரம்பன் செங்குட்டுவன் என்பன போன்ற அரசர்களின் பெயர்களும், பாண்டிய மன்னரில் 'ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்' என்பது போன்ற அரசர்களின் பெயர்களுமே, தமிழ் மூவேந்தர்கள் அக்காலத்து வட நாட்டிலும் தங்கள் ஆட்சியைச் செலுத்தி ஆரிய மக்கள்பால் ஆதிக்கஞ் செலுத்தி வந்தார்கள் என்று தெரிகிறதல்லவா! சேரலாதன் என்ற வீர மன்னன் தனது இணையற்ற அரசாட்சி இமயம் வரை சென்றது என்பதற்கு அறிகுறியாக, இமய

மலைமீது தமது விற்கொடியைப் பொறித்துவைத் தான் என்ற செய்தி சரித்திரத்தில் அழியா இடம் பெற்றிருக்கிறதன்றோ!

இவ்விதம் ஒரு காலத்தில் நம் முன்னோர் இந்தியா முழுதும் வாழ்ந்துவந்திருக்கையில்,—நமது தமிழரசர்கள் இந்தியா முழுதும் தங்கள் ஆட்சியை நடத்தி வந்திருக்கையில்,—நமது தமிழ் மொழி ஆதியில் பரவி யிருந்திருக்கையில், நம்மை இந்தியரெனக் கூறிக் கொள்வது ஏன் பொருத்தமாகாது என்று நமக்குத் தோன்றவில்லை. இப்போது வடநாட்டில் வாழும் மக்களுக்குள்ள உரிமையைக் காட்டிலும், நமக்கல்லவோ அந்நாட்டில் அதிக உரிமையும், பாத்தியதையும் உண்டு. இந்நிலையில் ஸர். பன்னீர்செல்வம் நமக்கு இந்தியர் என்ற பெயர் பொருந்தாது என்று கூறுவதை ஒப்புக்கொள்ள முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். காலதேவன் செய்யும் விசித்திர விளையாட்டின் பயனாக, ஒரு காலத்தில் இந்தியா முழுதும் பரவியிருந்த நாம் இப்போது தென்னாட்டளவில் மட்டும் நின்றுவிட்டிருக்கிறோமாயினும், மீண்டும் இந்தியா முழுவதையும் நம் ஆதிக்கத்தில் கொண்டு வரக்கூடிய சந்தர்ப்பம் வாய்க்காமற் போகாது. இந்தியா முழுவதையும்—ஏன்? உலக முழுவதை

யுமே—நமதாக ஆக்கிக்கொள்ள முயல்வதை விட்டு, ஒரு சிறு நிலப் பரப்புள்ள தென்னாடு மட்டும் போதும்; அதுவும் ஆந்திரம், கேரளம், கர்நாடகம் முதலியன வெல்லாம் பிரிந்துபோக தமிழ் நாடு மட்டும் போதும் என்று 'ஓரடிக் குச்சுக்குள்' வாழ விரும்புவது நமக்குக் கேவல மில்லையா? இழிவில்லையா? என்று கேட்கிறோம்.

வட நாட்டு மக்கள் ஆதிக்கத்திற்குள் ஒருகாலும் இல்லாத நமக்கு இந்தியர் என்ற பெயர் பொருந்தாது என்று ஸர். பன்னீர்செல்வம் சொல்கிறார். தமிழர்களாகிய நாம் வட நாட்டு மக்கள் ஆதிக்கத்திற்கு உட்படா திருந்திருக்கலாம். நம் முன்னோர் ஆதிக்கத்தில் வட நாடும் வட நாட்டு மக்களும் இருந்தார்களே; அதைத் தெரிவிப்பதற்காக வாயினும், நாமும் இந்தியர் தான்; நம் நாடும் இந்தியாவைச் சேர்ந்ததுதான் என்று கூறிக்கொள்ள வேண்டாமா? யோசித்துப் பாருங்கள் நேயர்களே!

'இல்லை; இல்லை. நம் தமிழ் நாட்டுக்கு இந்தியா என்ற பெயர் சிறிதும் பொருந்தாது. நாம் இந்திய ரல்லர்' என்று ஸர். பன்னீர்செல்வம் பிடிவாதமாகக் கூறுவாரானால், நாம் அவருக்கு ஒன்று கூறுவோம். அதாவது அவரும், அவரது கட்சி

பினரும் 'திராவிடர்; திராவிடர்' என்று அடித்துக்கொள்ளுகிறார்களே; அப் பெயர் தமிழர்களாகிய நமக்கு ஒரு சிறிதும் பொருந்தாது என்பதே. அது எப்படி என்று அவரும் அவரது கோஷ்டியாரும் ஆத்திரத்தோடு சீறி யெழுந்து கேட்கலாம். அதற்கு நாம் காரணங் காட்டுவோம். தமிழ் மக்களுக்குத் திராவிடர் என்ற பட்டம் சூட்டியவர்கள், தங்களுக்கு நேர் எதிரிகள் என ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியார் கருதும் வட நாட்டு ஆரியர்களேயாவர். ஆரியர்கள் தென் தமிழ் நாட்டில் குடியேறிய பின்னர், ஆரிய மொழியும், தமிழ் மொழியும் கலப்புற்றதன் பயனாக, தமிழ் மொழியினின்றும் பிறந்த தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் ஆகிய மொழிகளைத் திராவிட மொழிகள் என அழைக்கப்பட்டபோது, ஆரியர்கள் (வட நூலார்) பெயரறியாது பழைய மொழியாகிய தமிழையும் திராவிட மொழிகளில் ஒன்றாகக் கருதி அழைக்கலாயினர். ஆகவே, தெலுங்கர், மலையாளிகள், கர்நாடகர், துளுவர் முதலியவர்களோடு தமிழர்களையும் அவர்கள் திராவிடர்களெனவே வழங்கலாயினர். இவ்வுண்மையை யறியாது ஒரு சிலர் தமிழ் என்பது திராவிடம் என்பதன் திரிபு என

வுங் கூறி வல்வழக்காடி வருகின்றனர். ஆயினும் திராவிடர் என்ற பதம் தமிழர்களுக்கு எவ்வாற்றுனும் பொருந்தாது.

இவ்விதம் ஆரியர்கள் அறியாமை காரணமாக இட்ட பெயரை, சரித்திராசிரியர்கள் வழங்கி வருகிறுர்கள் என்ற காரணத்தால், ஸர். பன்னீர் செல்வம் கோஷ்டியார்—ஏன்? ஜஸ்டிஸ் கட்சியார் அனைவருமே—தமிழரைத் திராவிடர்களென்றும் தமிழ்ப் பழங்குடி மக்களை ஆதித்திராவிடர்களென்றும் கூறி வருகின்றனர். இவ்வாறு பண்டைத் தமிழ் மக்கள் வழிவந்த நமக்குச் சிறிதும் பொருந்தாத திராவிடர் என்ற பெயரை, சிறப்பாகக்கொண்டு வழங்கி வரும்போது—அவ்விதம் திராவிடர்கள் என்று கூறிக்கொள்வதையே பெருமையாகக் கருதும்போது—இமயமலை முதல் கன்னியாகுமரிவரை யுள்ள நிலப்பரப்பை ஒரு தேசமாகக்கொண்டு வழங்கிவரும் இந்தியாவில் வாழ்கிறேமென்ற காரணத்தைக் கொண்டு நம்மை இந்தியர்கள் என ஏன் அழைத்துக்கொள்ளக்கூடாது? இந்தியர் என்ற பெயர் நாம் வாழும் நிலத்தை யொட்டி வந்ததே யொழிய, அது ஒன்றும் கேவலப் பொருளைத் தரவில்லையே! ஆரியர் வருமுன் இந்தஸ் நதி ஓடும் பாஞ்சால தேசம்

உட்பட விந்தியமலைத் தொடருக்கு வடக்கேயுள்ள நிலப் பிரிவு முழுவதிலும் நமது முன்னோர் பரவி யிருந்து வாழ்ந்து வந்தார்கள் என்பதை அதிக மாக உறுதிப்படுத்தும் வகையில் அவர்களது சந்ததியார், இன்னமும் வங்காளம், நேபாளம், மத்திய மாகாணம் முதலிய இடங்களில் வாழ்ந்து வருகிறார்கள். அப்படி யிருக்க, இந்தியர் என்ற பெயர் நமக்கு ஏன் பொருந்தாது? மிகப் பொருத்த மான தென்பதே நம்முடைய அபிப்பிராயம். சரித்திர ஞானமுள்ளவர்கள், பேரறிஞர்களெல் லாம், **நாம் பேசும் மொழியால் தமிழர்களாயினும், வாழுந் தேசங் காரணமாக இந்தியர்களே** என் பதை ஒப்புக்கொள்வர் என்பது நிச்சயம்.

தமிழர் இந்தியராக மாட்டார்கள்; இந்தியர் என்ற பெயர் பொருந்தாது என வாதிக்கும் ஸர். பன்னீர்செல்வம், அக் கொள்கைக்கு அரண்செய் யும் வகையில், அன்னிய நாட்டார் ஆதிக்கத்தி லுள்ள நமக்கு ஏற்படக்கூடிய சுயராஜ்யமும் இந்திய சுயராஜ்யமாக இருக்கக்கூடாது; திரா விட சுயராஜ்யமாகவே இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார். "நாம் சம்பந்தப்பட்ட வரை யில் சுயராஜ்யம் என்கிற வார்த்தைக்கு அர்த்தம் இருக்குமேயாகில் அந்த இராச்சியம் தமிழ் அல்

லது திராவிட இராச்சியமாக இருக்கவேண்டும். ஆதிக்கத்தை நடத்துகிறவர்கள் திராவிடர்களாய் இருந்தால்மட்டுமே அது உண்மையில் சுயராச்சியம் ஆகும்" என்பது அவர் வாதம். இவரது இவ்விசித்திரவாதம் எவ்வளவுதூரம் பொருத்தமானது என்பதை நாம் விவரிக்காமலே அரசியல் ஞானமுள்ளவர்கள் அறிந்துகொள்வர்.

ஒரு கண்டத்தையோ அல்லது ஒரு தேசத்தையோ பல பிரிவுகளாகக் கூறுபடுத்துவது அதிகாரம் விரும்பும் சுயநலக்காரர்கள் வேலையேயொழிய, உலகில் ஒற்றுமையையும், ஐக்கிய பாவத்தையும் உண்டுபண்ணுபவர்கள் வேலையல்ல. ஆகவே, உலகமே ஒன்றுபடவேண்டும்; ஒரே சமுதாயமாகவேண்டும் என்று விரும்பும் இக்காலத்தில் இந்தியாவினின்றும் தமிழ் நாட்டைப் பிரித்து தனி ஆட்சி யேற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஸர். பன்னீர்செல்வம் கூறுவது கேலிக்கூத்தாகவே முடியும். இவ்விதம், தேசப் பற்று போய், மாகாணப் பற்றாக மாறினால், இன்னும் கொஞ்சம் நாளில் வகுப்புப் பற்றாகவுங் குறுகும் என்பது திண்ணம். அப்போது ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனி ஆட்சி வேண்டுமென்று கேட்கக்கூடிய விபரீத நிலை யேற்பட்டு

விடுமென்பதை ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியார் அறியவேண்டும். அயர்லாந்தில் அல்ஸ்டர் பிரதேசத்தில் வாழும் ஒரு பிரிவினர் அத்தேசத்துடனே சம்பந்தம் வைத்துக்கொள்ளாது, மற்ற சமூகத்தாருடனும் தொடர்பு வைத்துக்கொள்ளாது ஒதுங்கி தனித்து வாழ்ந்துவருகின்றனர். அவர்கள் நிலை இன்று பிறர் பார்த்து பரிதபிக்கத் தக்கதாகவும், ஏளனஞ் செய்யக்கூடியதாகவும் இருந்துவருகிறது. அதுபோல, ஸர். பன்னீர் செல்வமும், தமிழ் நாட்டை அலஸ்டர் பிரதேசம் போன்றதாக்கி உலகின் பரிகாசத்துக்கு ஆளாக்க விரும்புகிறாரா என்று தெரியவில்லை.

ஐரோப்பியாவிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும், ஒரே மொழி, ஒரே சமயம், ஒரே சமூகம் கொண்ட மக்களே வாழ்ந்து வருகிறார்கள். இந்தியாவிலோ அவ்விதமில்லை; பல சாதியினர், பல மொழியினர், பல மதத்தினர் வாழ்ந்து வருகின்றனர்; ஆதலால், அவரவர்களுக்குத் தனி யரசாட்சி இருப்பதுதான் நல்லது என்று ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியார் கூறுகின்றனர். இவ்வாதம் பொருத்தமற்றது; பொய்யுமாகும். பிரிட்டிஷ், பிரான்ஸ், அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலி போன்ற தேசங்களில் பல பிரிவினர்,

பல மொழியினர், பல மதத்தினர் இருக்கின்றனர். உதாரணமாக, இங்கிலாந்தில் ஆங்கிலேயர்களிலேயே டேனியர், சாக்ஸன்கள், ஸ்காட்டிஸ்கள், இங்கிலீஷ்காரர்கள் ஆகிய பிரிவினர் இருக்கின்றனர். ஆனால், அவர்களெல்லாம் ஒரே தேசத்தினர் என்ற முறையில் ஐக்கிய மனோபாவங்கொண்டு, வாழ்ந்து வருகின்றனரே யொழிய, சிறு சிறு வித்தியாசங்களை யெல்லாம் பெரிதாக்கிச் சண்டை போட்டுக்கொள்வதில்லை. தத்தமக்குத் தனித்தனி யாட்சி வேண்டுமென்றுங் கேட்பதில்லை.

அவ்வித மிருப்பதனுல்தான், அவர்களெல்லாம் சுதந்தர புருஷர்களாய், பல துறைகளிலும் முன்னேற்ற மடைந்தவர்களாய், பிற தேசத்தினர் மதிக்கக்கூடிய விதமாய் இருந்து வருகின்றனர். நாமோ வகுப்புவாதம் பேசி, தென்னுட்டார் வடநாட்டார் என்ற மாகாணப் பிரிவினை பாராட்டி, நமக்குள்ளேயே போராடி, இன்றுள்ள நிலைமையிலேயே என்றும் அடிமை மக்களாய் இருந்து வரும் வழியைத் தேடி வருகிறோம். ஸர். பன்னீர் செல்வனுரது திராவிட ராஜ்ய வாதம் இவ்வித இழி நிலையைத்தான் உண்டுபண்ணுமே யொழிய, வேறெவ்வித நன்மையையும் உண்டுபண்ணுது.

இன்று வட நாட்டார், தென்னாட்டார், பிற நாட்டார் எல்லாம் அன்னிய நாட்டாருக்கு அடிமைப்பட்டிருக்கிறோம். பொதுவாக, நம்மையெல்லாம் பிணைத்து வைத்திருக்கும் அடிமைத் தளையைத் தகர்த்தெறியும் விஷயத்தில் நாம் அனைவரும் இப்போது கருத்தைச் செலுத்த வேண்டுமேயொழிய, வேறு விவகாரம் பேசுவதற்கு நேரமேயில்லை. இப்போது நடைபெற்றுவரும் தேச விடுதலைப் போராட்டத்தினால் நம் நாட்டுக்குச் சுயராஜ்யம் ஏற்படுமானால், அது இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ஏழை யெளியவர்களது சுயராஜ்யமாகவே இருக்குமே தவிர, வட நாட்டார் யாரோ சிலருக்கு மட்டும் கிடைக்கும் சுயராஜ்யமாக இராது. அவ்விதம் ஒரு சிலர்க்குமட்டும் அரசியலுரிமை கிடைக்கக்கூடியதா யிருக்குமானால், அது சுயராஜ்யம் என்ற பெயரைப் பெறாது. சுயராஜ்யம் என்பதற்கு அது அர்த்தமுமாகாது.

இந்தியாவுக்குப் பரிபூரண சுயராஜ்யம் கிடைக்கும்போது தமிழர்களாகிய நமக்குந்தான் அதை அநுபவிக்க சம உரிமையுண்டு. சுயராஜ்யத்தைப் பங்கு போட்டுக்கொள்ள நமக்கும் அதிகாரமுண்டு. இந்தத் தேச விடுதலைப் போராட்டத்

தைத் தீவிரமாக நடத்திவரும் தேச மகா சபையா கிய காஸ்கிரஸ் ஏற்கனவே, இந்தியாவை பாஷா வாரி—மாகாணங்களாகப் பிரித்திருப்பதால் அதன்படி சுயராஜ்யத்தின்கீழ் அரசியலும் ஏற் படும் என்பது திண்ணம். அப்போது, தமிழ் நாட் டில் வட நாட்டாரோ, வட நாட்டில் தமிழ் நாட் டாரோ, ஆந்திர தேசத்தில் மலையாளியோ, மலையாளத்தில் கர்நாடகரோ ஆட்சி செலுத்தப் போவதில்லை. அந்தந்த மாகாணத்தில் பாரம் பரியமாக வாழ்ந்துவரும் மக்களில் ஒருவரே தலைவராய் இருந்து ஆட்சி செலுத்தி வருவார். ஆதலால், ஸர். பன்னீர்செல்வம் 'நமது சுய ராஜ்யம் தமிழ் அல்லது திராவிட ராச்சியமாக இருக்கவேண்டும்; ஆதிக்கத்தை நடத்துகிற வர்கள் திராவிடர்களாய் இருந்தால் மட்டுமே அது உண்மையில் சுயராச்சியம் ஆகும்' என்று கூறி வாதிப்பதில் சிறிதும் அர்த்தமே யில்லை.

மேலும், ஆழ்ந்து யோசித்தால் அரசியல் ஆதிக் கம் என்பது மனிதனது முக்கிய லட்சியமன்று. மனித வர்க்கத்தின் முன்னேற்றத்துக்கு அதை ஓர் துணைக் கருவியாகவே கருதவேண்டும்.

ஆகவே, அரசியல் உரிமை என்ற பெயரால் நம் பாரத தேசத்தைப் பல பிரிவுகளாக்கிப் பங்கு

போட்டு, அதற்கேற்ப மக்கள் சமூகத்திலும் பேதங் கற்பித்துப் பிளவுண்டாக்கிச் சகோதர பாவத்தையும் ஒற்றுமையையும் குலைக்கும் வீண் முயற்சியை இக்கணமே அவரும், அவரது தோழர்களும் விட்டு விடுவார்களென்று நம்புகிறோம்.

# 10. நமது கடமை என்ன?

பிராம்மணர் - பிராம்மணரல்லாதார், ஆரியர்-தமிழர், தமிழர் யார்? தமிழ் நாடு தமிழர்க்கே! என்ற கிளர்ச்சிக்கும், வகுப்பு வேற்றுமைக்கும் காரண மென்ன? நமது சமூகத்தில் ஒரு சாரார் சமூக நிலையிலும் பொருளாதார நிலையிலும் அரசியல் நிலையிலும் சமய நிலையிலும் உயர்ந்திருப்பதும், மற்றொரு குழுவினர் தாழ்ந்திருப்பதுமே இவ்வகுப்பு வேற்றுமைக்கு அடிப்படையான முக்கிய காரணமென்று நாம் கருதுகிறோம். தன்னைக் காட்டிலும், தன்னைச் சார்ந்திருப்பவன் தகுதி, கல்வி, செல்வம் முதலியவைகளில் மேம்பட்டிருந்தால் பொறாமை யுண்டாவது மனிதனது இயற்கை. நம் நாட்டைப் பொறுத்தவரை, எவ்வகையாகவோ பிராம்மணச் சகோதரர்கள் தாம், தமிழ் சமூகத்தில் உயர்ந்த தகுதியும், சிறந்த கல்வியும், பெரிய பதவியும் வெகு காலமாகவே வகித்து வருகின்றனர். சர்க்கார் உத்தியோகங்களிலும், பெரும் பொருள் வருவாயுள்ள உயர்தர உத்தியோகங்களிலும், அவர்கள்தான்

பெரும்பான்மையாக இருந்து வந்திருக்கின்ற னர். அரசியல் அந்தஸ்திலும்—அதாவது அர சாங்க நிர்வாக சபை அங்கத்தினர் பதவி, மந்திரி பதவி, சமஸ்தான திவான் பதவி முதலியவைகளை ஏற்று நடத்துவதிலும்—அவர்களே உயர்வடைந் திருக்கின்றனர். ஆகவே, அவர்கள்மீது ஒரு சிலர் பொறுமையும், குரோதமும் பாராட்டி வருவதில் ஆச்சரிய மொன்றுமில்லை. கவர்னரே நம் மாகா ணத்தை அரசாட்சி செய்துவந்த காலத்திலும் இரட்டை யாட்சி காலத்திலும் பிராம்மணச் சகோதரர்களே நிர்வாக சபையிலும் மந்திரி பதவி முதல் சர்க்கார் இலாகா முதலிய எல்லா துறை களிலும் ஸ்தானம் வகித்து வந்தனர். அதைக் கண்டே, காலஞ் சென்ற ஸர். பி. தியாகராய செட்டியார், டாக்டர் நாயர் ஆகிய பெரியார்கள் பிராமணரல்லாதார்க்கும், அரசியலிலும் பிறவற் றிலும் சமத்துவத்தையும் தகுதியையும் ஏற்படுத்த வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு தென் னிந்திய நல உரிமைச்சங்கம் என்ற பெயர் கொண்ட ஜஸ்டிஸ் கட்சியை ஏற்படுத்தினார்கள். அவர்கள் நோக்கம் பிராம்மண சமூகத்தார்மீது பகைமை பாராட்டுவதல்ல; பிராம்மணர்களைப் போல் பிராம்மணரல்லாதாரும் அரசியல், சர்க்

கார் உத்தியோகம் முதலிய எல்லா துறைகளிலும் சம அந்தஸ்தைப் பெறவேண்டுமென்பதேயாகும் என்பதை இங்கு முக்கியமாகச் சகோதரர்கள் கவனிக்கவேண்டும். ஆனால், அப்பெரியார்களது உயரிய நோக்கம் பிற்காலத்தில் நன்கு நிறைவேற்றப்படவேயில்லை. ஒருசில பெரிய மனிதர்களும், பணக்காரர் ஜமீன்தார்களுமே இக்கட்சியின் பெயரைச் சொல்லி நன்மை யடைந்தார்கள். அதுவே, பிராம்மணரல்லாதார் கட்சியின் வாயிலாக நாம் கண்ட பலனாகும். இப்போது அக்கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலரும், தன்மதிப்பு இயக்கச் சகோதரர்கள் சிலரும் சேர்ந்து பாமர மக்களிடையே வகுப்புத் துவேஷ உணர்ச்சியைக் கிளப்பிவிட்டுத் தங்கள் சுயநலக் காரியங்களைச் சாதித்துக் கொண்டுவரும் அலங்கோல நிலையை, ஸர். பி. தியாகராய செட்டியாரும், டாக்டர் நாயரும் காண்பார்களானால் மனமிக வருந்திக் கண்ணீர் வடிப்பர் என்பது திண்ணம்.

அது நிற்க, பிராம்மணச் சமூகத்தாரில் வைதீகராயுள்ள சிலர் பழமை பாராட்டியும், சாதி பெருமை பேசியும் மற்ற வகுப்பாரை, "சூத்திரன்" என்றும், "பள்ளிப்பயல்" என்றும் கேவலப் பட்டம் சூட்டி இழிவாக நடத்துவதும் இப்

போதுள்ள வேற்றுமை யுணர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

பிராம்மண வகுப்பாருக்கு அடுத்தபடியாக, முதலியார், செட்டியார், நாயுடு முதலியவர்களில் சிலர் காலப்போக்கில் சமூக, அரசியல் தகுதிகளில் உயர்வடைந்து வருவதன் காரணமாக—பெருமித மனோபாவங் காரணமாக—பிராம்மணர்கள்மீது சாட்டப்பட்டுள்ள மேற்குறித்த குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் அவர்களும் ஆளாகி வருகிறார்கள். ஆகவே, இவ்வகுப்பு வேற்றுமைப் பேயை யொழித்து சகோதர பாவத்தை உண்டாக்க வேண்டுமானால், பிராம்மணர்களோ, முதலியார் நாயுடு போன்ற மற்ற வகுப்பினரோ யாராயினும் சரி; சுயநலத்தையும், சாதி அகம்பாவத்தையும் கைவிட்டு, சமத்துவம் உரிமை ஆகியவைகளை எல்லா வகுப்பாருக்கும் வழங்கித் தங்களைப் போன்று அவர்களும் மனிதர்களே; அவர்கள் நம் சகோதரர்களே என்ற பரந்த சமரச மனோபாவத்தோடு நடந்து கொள்ளவேண்டும். தமிழ் நாட்டுக்கும், தமிழ்ச் சமூகத்துக்கும் பெருஞ் சனியாக வந்து சேர்ந்திருக்கும் சாதி, சமய பேதங்களை அறவே ஒழிக்கப் பாடுபடவேண்டும். அப்போதுதான் நம் நாட்டு மக்களிடையே ஒற்றுமை

யும் அன்பும் நிலவும். இவ்விதப் பிராம்மணர்-பிராம்மணரல்லாதார், ஆரியர்-தமிழர் என்ற அர்த்தமற்ற வேற்றுமைகளெல்லாம் தாமே ஒழிந்துபோம்.

நீண்ட காலமாக, அரசியல், சமூகம், சமயம் முதலிய பல துறைகளிலும் பெருஞ் செல்வாக்கும் உயர்வும் பெற்று விளங்கிவந்த பிராம்மண வகுப்பார் கால நிலையை யொட்டி, தாங்கள் விலகிக்கொண்டு, பிற வகுப்பாருக்கு அவகாசம் கொடுக்க வேண்டும். அப்போதுதான், மற்றவர்களுக்கு இவர்கள் மீதுள்ள வீண் சந்தேகமும் குரோத பாவமும் நீங்கி, நல்லெண்ணமும் நம்பிக்கையு மேற்படும்.

இத்துடன், சமூகக் கட்டுப்பாடுகளிலும், அரசாங்க சட்ட திட்டங்களிலும் கூட தமிழ் மக்களுள் உயர்வு தாழ்வைக் கற்பிக்கும் விதிகளும் சட்டங்களும் எப்படியோ நுழைந்துவிட்டிருக்கின்றன. இன்றைய தமிழ்ச் சமூக அமைப்பே, வடநாட்டு ஆரியர் சூழ்ச்சியாக வகுத்த வருணாசிரமத்தையும், ஆசார அனுஷ்டானங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட் டிருக்கிறதென ஒரு சிலர் கூறுகின்றனர். ஒரு குலத்துக்கு ஒரு நீதி கூறும் மனு ஸ்மிருதி, பராசர ஸ்மிருதி முதலிய

ஆரிய தரும சாஸ்திரங்களை ஆதாரங்களாகக் கொண்டே, இன்று அமுலிலிருக்கும் இந்தியன் பினல்கோட் சிவில் சட்டங்களை ஏற்படுத்தியிருப்ப தாகவுங் கூறப்படுகிறது. தாகூர் சட்ட கலா சாலை விரிவுரையாளர் கே. சுப்பிரமணியம் பிள்ளை போன்ற சட்ட நிபுணர்கள் இதற்குப் பல உதார ணங்களை எடுத்துக் காட்டுகிறார்கள். அவைகளில் ஒன்று பிராம்மணன் ஒருவன் காதற் கிழத்தி யாக ஒரு மங்கையை வைத்துக்கொண்டால், அவள் வாயிலாகப் பிறக்கும் சந்ததிகளுக்குத் தன் சொத்தைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டிய அவசியமில்லையாம்; ஜீவனாம்சம் அளித்தால் போதுமாம். ஆனால், பிராம்மணரல்லாத மற்ற வகுப்பாரோ காதற்கிழத்தியின் பிள்ளைகளுக்குத் தங்கள் சொத்தைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டு மாம். இது என்ன நியாயம் பாருங்கள்! இது போன்ற ஒரு குலத்துக்கு ஒரு நீதி கூறும் சட்டங்களை நீக்கிவிட்டு, யாவர்க்கும் சம நியாயம் வழங்கும் சட்டங்களை ஏற்படுத்தவேண்டும். அப் போதுதான் ஒரு வகுப்பார் இன்னொரு வகுப்பார் மீது கொள்ளும் துவேஷ புத்தி நீங்கும். எதிர் கால சட்டங்கள் மனிதராயுள்ள அனைவர்க்கும் சம நீதி வழங்கத்தக்கதாக அமையவேண்டும்.

இதற்குச் சட்ட நிபுணர்களும் சட்ட சபை பிரதி நிதிகளும் இன்றிருந்தே முயற்சி யெடுத்துக் கொள்ளவேண்டும். தமிழ்ச் சமூகத்திலேயே வீரர் பரம்பரையைச் சேர்ந்த மறவர், கள்ளர், படையாச்சி, குறவர் முதலிய வகுப்பார்மீது குற்ற பரம்பரைச் சட்டம் என்றொரு அநியாய சட்டம் நீண்டகாலமாகச் சுமத்தப்பட்டிருக்கிறது. இச் சட்டம் மேற்குறிப்பிட்ட வகுப்பினரைமட்டு மல்ல; தமிழ்ச் சமூகத்தையே களங்கப்படுத்துவ தாகும்; ஆதலால், முதலில் அச் சட்டத்தைச் சட்ட புத்தகத்திலிருந்தே எடுத்துவிடவேண்டும்.

பிராம்மணராக ஒருவர் பிறந்துவிட்டாலே நமது சமூகத்தில் சகல சுக சௌகரியங்களும் அவருக்கு யாதொரு சிரமமுமின்றி எளிதில் கிடைத்துவிடக் கூடியதாக இருக்கிறது. மற்ற வகுப்பாருக்கு இல்லாத விசேஷ சலுகைகள் அவர்கள் விஷயத்தில் காட்டப்படுகின்றன. இந் நிலைமை இன்று நேற்றல்ல; வெகுகாலமாகவே இருந்துவருகிறது. சமூகத்தில் மற்றவர்களுக் கில்லாத தனிச் சிறப்பு, உயர்வு, சுகபோகம் ஒரு வர்க்குக் கிடைக்குமானால், மற்றவர்களுக்கு அவர் மீது பொறாமையும் ஆத்திரமும் ஏற்படுவது இயல்பேயன்றோ! எக்காலத்திலோ எவ்வித

மாகவோ ஏற்பட்டுவிட்ட இவ்வித விசேஷ சலுகைகளையும், சுகபோகங்களையும் தங்களுக்கு எக்காலத்தும் இருந்துவர வேண்டுமென்று விரும்பாமல், பிராம்மணச் சகோதரர்கள் அவைகளை யெல்லாம் தவிர்த்துவிட்டு, மற்றவர்களைப்போல உழைத்து உண்டு வாழும் உயரிய-சமத்துவ-வாழ்வைப் பெற முயலவேண்டும். நாம் இவ்வளவும் கூறுவது எதற்காக வென்றால், மனிதனுக்கு மனிதன் பேதங் கற்பிக்கக்கூடியதாகவுள்ள சாதி, சமய வேற்றுமை, அர்த்தமற்ற மூடப் பழக்க வழக்கங்கள் முதலியவைகளையெல்லாம் நீக்கி விட்டோமானால், வகுப்பு வேற்றுமைப் பேயின் நச்சுப் பற்களைப் பிடுங்கி யெடுத்துவிட்டவர்களாவோம். அப்புறம், இப் பேய் நம்மிடையே தலைகாட்டாது என்பதற்கேயாகும். அது நிற்க,

"தமிழ் நாடு தமிழர்க்கே" என்று சில தமிழ் வீரர்கள் முழங்கிவருகிறார்கள். தமிழ் நாடு தமிழருக்குத்தான். இதில் என்ன சந்தேகம்? பிற இடங்களில் கிளம்பும் இவ்வித அர்த்தமற்ற கூச்சலைக் கேட்டுத் தமிழர்களுங் கூச்சல் போடவேண்டாம். இக் கூச்சல் அர்த்தமற்றது. இவ் வீண் கூச்சல் வலுக்குமானால், வெளி நாடுகளில் பிழைப்புக் கருதிச் சென்று வாழும் நம் தமிழ்ச்

சகோதரர்களுக்குத்தான் ஆபத்து உண்டாகும்; விபரீதமும் ஏற்படும். பர்மா, சிலோன், மலேயா, ஜாவா, மோரீசு, தென்னுப்பிரிக்கா, பிஜி முதலிய வெளி நாடுகளில் எல்லாம் தமிழர்கள் சென்று குடியேறி வாழ்ந்து வருகிறார்கள். வட நாட்டுச் சம்பந்தங் கூடாது; வடநாட்டார் உறவு கூடாது என் றெல்லாம் ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியார் கூறுகிறார்க ளல்லவா! அவ் வட நாட்டின் மூலை முடக்குகளி லெல்லாம் அதாவது, பம்பாய், கல்கத்தா, டெல்லி, ஸிம்ளா, பஞ்சாப் முதலிய இடங்களி லெல்லாம்—நம் தமிழர்கள் சென்று உத்தியோகஞ் செய்து வாழ்ந்து வருகிறார்கள். தமிழ் நாடு தமிழர்க்கே! என்ற வீண் கூச்சல் விபரீதமாகி, வெளி நாட்டாரை விரட்டி யடிப்பதென்று ஏற்பட்டால், மேற்குறித்த இடங்களிலுள்ள தமிழர்களெல்லாரையும் அவ்விடத்திலுள்ளார் உங்கள் நாட்டுக்குப் போங்கள் என்று விரட்டி யடிப்பார்களன்றோ! இப்போதே சில காலமாக, பர்மாவிலும், சிலோன் முதலிய இடங்களிலும் நம்மவர்களை விரட்டி யடித்து வருகிறார்கள். தங்கள் நாட்டில் வெளியார் இருக்கக்கூடா தென்ற விபரீத உணர்ச்சி பர்மியரிடையே ஏற்பட்டபிறகு, அந் நாட்டில் நடந்துவரும் அலங்

கோல நிலைமை கண்கொண்டு காண முடியாததா யிருக்கிறது. வகுப்பு வேற்றுமை எவ்வளவு தூரம் ஜன சமூகத்தைப் பாழ்ப்படுத்தி வருகிறதோ, அதுபோன்றே குறுகிய நாட்டுப் பற்றும் தேசத்தை — உலகத்தை — அலக்கழித்து வருகிறது. இதையெல்லாம் நன்கு உணர்ந்துதான் மகாத்மா காந்தி குறுகிய தேசப்பற்று கூடாது என்று கூறி உபதேசித்துவருகிறார். சமீபத்தில் ஜப்பானிய பார்லிமெண்டு மெம்பரான ஸ்ரீ தகௌகா ஜப்பானுக்குச் செய்தி விடுக்கவேண்டுமென்று கேட்டபோது, அவர்களது 'ஆசியா ஆசியருக்கே' என்ற கொள்கையைக் கண்டிக்குந் தோரணையில் பின்வருமாறு தெரிவித்தார்:—

"ஆசியா கிணற்றுத் தவளையாகக் கிடக்கட்டுமென்று இருந்தால்தான், ஆசியா ஆசியருக்கே உரியது என்று கூற முடியும். ஆனால் ஆசியா கிணற்றுத்தவளையாக இருக்கமுடியாது. உலக முழுவதுக்கும் அது செய்தியைப் பரப்பவேண்டியிருக்கிறது. இந்தியா, சைனா, ஜப்பான், பர்மா, இலங்கை, மலாய் நாடு ஆகியவையனைத்தும் ஆசியாவைச் சேர்ந்தவைதான். ஆசியா முழுதும் புத்தமதத்தின் செல்வாக்கு பரவியிருக்கிறது. பர்மியர்களும் இலங்கையர்களும் வெறும் பெயரள

வில்தான் புத்தர்கள் என நான் அவர்களுக்குத் தெரிவித்தேன். புத்தமதம் இந்தியாவில் உண்மையாகப் பின்பற்றப்படுகிறதென்றும் நான் சொன்னேன். இதையேதான் நான் சீனர்களுக்கும், ஜப்பானியர்க்கும் சொல்லுவேன்.

"ஆசியா ஆசியருக்குமட்டுமென்றி உலக முழுவதுக்குமே உரியதாக இருக்கவேண்டுமாயின், அது மறந்துள்ள புத்த மதத்தை மீண்டும் தக்க வகையில் பின்பற்றி உலகம் முழுதுக்கும் பரப்ப வேண்டும். இன்று எங்கு பார்த்தாலும் புத்த மதம் குன்றிக்கிடக்கிறது. பர்மாவில் பொங்கிகள் முஸ்லிம்களை வெருட்டுகிறார்கள். ஆனால் புத்த மதத்தை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் இன்னொருவரைக் கண்டு ஏன் பயப்படவேண்டும்? ஆகவே, நீங்கள் உங்கள் பரம்பரைப் பெருமையைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்று கூறுவதைவிட நான் கூறுவதற்கு வேறு என்ன செய்தி இருக்கிறது?"

தமிழ் மக்களாகிய நாம் மகாத்மாவின் இவ்வுபதேச தத்துவத்தைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். "யாதும் ஊரே! யாவருங் கேளிர்!" என்று கூறிய தமிழ்ப் புலவன் வழி வந்த நாம், உலகின் பல பாகங்களிலுள்ள தேசங்களையும்

நம்முடையவாகவும் உலகில் வாழும் மக்களையெல்லாம் நம்முடைய சகோதரர்களாகவுங் கொண்டு வாழ விரும்பவேண்டுமேயொழிய, "தமிழ் நாடு தமிழர்க்கே" என்று கூச்சலிட்டு, கிணற்றுத் தவளையாக இருக்கக் கனவிலும் எண்ணக்கூடாது. தமிழ் மக்களின் கடவுள் கொள்கை, சீரிய ஒழுக்கம் முதலியவைகளை உலக முழுதும் பரப்பி உயரிய புகழைப் பெற முயலவேண்டும். அதை விட்டு நம்முடன் சேர்ந்து வாழும் சகோதரர்களையே, வெளிநாட்டிலிருந்துவந்த ஆரிய வம்சத்தார் என்று வெருட்டி யடிக்க முயல்வது தமிழர் பெருமைக்கு உகந்ததல்லவென்றே கூறுவோம். பிராம்மணர்கள் சூழ்ச்சிக்காரர்கள் ; அவர்கள் தமிழர்களைப் பலவகையாலுங் கெடுத்துவிடுவார்கள் என்று பூச்சாண்டி காட்டுவதும், அதைக் கேட்டுச் சிலர் பயப்படுவதுங் கேலிக் கூத்தல்லவா! மகாத்மா கூறுவதுபோல், தமிழர்களாகிய நாம் நம் பரம்பரைப் பெருமையைப் பின்பற்றிப் பரந்த நோக்கத்தோடும் மனித ஜீவாபிமானத்தோடும் நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதைத் தவிர, வேறு என்ன கூற முடியும்?

முதன்முதலாக, காடு பல கடந்துவந்த ஆரியரை ஏற்று அவருக்கு உணவும் உடையும் உறை

விடமுந் தந்து உறவுகொண்டாடியவர்கள் நம் மூதாதையர்கள்! பின்னர், யவனர் அராபியர், யூதர், சிரியன் கிறிஸ்தவர், முஸ்லிம்கள் முதலிய பலரும் பலகாலும் வந்து குடியேறியபோதெல்லாம் முறையே அவர்களை ஏற்று நிலமும் நலமும் பலவும் உதவி ஒத்த உரிமை அனைத்தும் வழங்கி உடன்பிறந்தார்போல நடத்தி வந்தவர் நம் தமிழ்ச் சான்றோர்! வேறுபாடு அறியாமல் விருந்தினர் யாரையும் முகமலர்ந்து உவப்போடு வரவேற்றுத் தம் ஒத்த உரிமை நலங்கள் வழங்கிவந்தவர்கள் நம் முன்னோர்கள்! அப்பேர்ப்பட்ட பரந்த மனப் பான்மையும், மனித ஜீவாபிமானமும் உடைய தமிழர்கள் வழிவந்த நாம் இப்போது 'தமிழ் நாடு தமிழர்க்கே' என்று கூறி வெளி நாட்டாரை விரட்டி யடிக்கிறோம் என்ற வீண் பழியை ஏற்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

அன்னியர் கூட்டுறவாலும் அன்னிய மொழி வழங்குவதாலும் நம் நாட்டுக்கும் நம் சமூகத்துக்கும் நம் மொழிக்கும் பாதக மேற்படுமென்று ஸர். பன்னீர்செல்வம் கோஷ்டியார் கூறுகின்றனராயினும், உண்மையில் நாம் அஞ்சவேண்டியதில்லை. தேச சரித்திரத்தைப் பாருங்கள். பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்குமுன் வரை, எந்த அன்னிய

அரசாட்சியாயினும் நம் நாட்டை உண்மையாக ஆண்டதாக்க் கூற முடியுமா ? வடநாடுகள் அந்நியர் படையெடுப்பால் அலங்கோலமடைந்த நாட்களிலும் நம் தமிழ் நாடு சீர்குலையவில்லை. நம் முன்னோர் அந்நியர் ஆட்சிக்கு இடங்கொடாமலே அரசாண்டு வந்திருக்கின்றனர். பிற்காலத்தில் தமிழ் நாட்டில் வந்து குடி புகுந்து அரசாண்ட பல்லவர்கள் முதலானோர் தமிழர்களாகவே ஆகிவிட்டனரேயன்றி, நம்மை அவர்கள் மயமாக ஆக்க முடியவில்லை என்பதை அறியவேண்டும்.

நம் தமிழ் மொழியை எடுத்துக்கொண்டாலோ, அதுவும் அவ்விதமே பிற மொழிகளின் ஆதிக்கத்துக்கு இடங்கொடாமலே வழங்கிவருகிறது. பிற மொழிகளைத் தம் மயமாக ஆக்கிவருகிறதேயொழிய, அவைகளின் மயமாக அது ஆகவில்லை. இந்தியாவில் வழங்கும் மொழிகள் பல ஆரிய மொழியே யாகிவிட்டன. தமிழின் குழந்தைகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளும் ஆரிய மொழி ஓசைகளையும், ஆரிய மொழி இலக்கணங்களையும் பெற்று அதன் குழந்தைகள்போல உருக்கொண் டிருக்கின்றன. ஆனல் தமிழ் மொழியோ இன்னும் ஆரிய மொழியை எதிர்த்தே நிற்கிறது. ஆரிய மொழிச்

சொற்கள் தமிழோடு கலந்தாலும் அதைத் தமிழ் மொழி உருவாக்கிக்கொண்டு விளங்குகிறது. தன்னை ஆரிய மொழி வடிவாக்கிக்கொள்ளாமல் ஆரிய மொழியைத் தன் வடிவாக்கிக்கொள்ளும் இலக்கணம் தமிழ் மொழியில் அமைந்துள்ளது; இத்தகைய வல்லமையும் சிறப்பும் தமிழ் மொழிக்கே உண்டு. தமிழ் இலக்கணத்தில் திசைச் சொற்களுக்கென்று தனி இடங் கொடுக்கப்பட்டிருக்கும் நுட்பத்தை அறிபவர்கள், பிற மொழிகள் நம் தமிழ் மொழியைக் கெடுத்து விடுமென்று சிறிதும் பயப்படவேமாட்டார்கள்.

அன்னியர் கூட்டுறவாலும் நாகரிகச் சேர்க்கையாலும் நம் நாகரிகமும் கலைஞானமும் கெட்டு விடுமென்று வாதிக்கப்படுகிறது. நம் நாகரிகமும் கலைஞானமும் தனிச்சிறப்பு வாய்ந்தவை; அவை வேறெந்த நாட்டினுடைய நாகரிகம், கலைஞானங்களுக்கும் எவ்வகையிலும் குறைந்தவையல்ல; பிறநாட்டு நாகரிகம், கலைஞானங்கள் சேர்ந்து அவைகளை அழித்துவிடக்கூடிய அவ்வளவு எளிமையுடையவையுமல்ல. ஆதலால், இவ்விஷயத்தில் நாம் அஞ்சுவதற்குச் சிறிதும் இடமேயில்லை. பிற தேச நாகரிகம், கலை ஞானங்களின் சேர்க்கை நம் நாகரிகம் கலைஞானங்களைச் சிறக்கச்

செய்யுமே யொழிய, அழித்துவிடா. மேலும், நாகரிகமும், கலைஞானமும் எந்த ஒரு தனி மனிதனுக்கோ அல்லது ஒரு தேசத்திற்கோ உரியவையல்ல. அவை மனித சமூகத்திற்கே உரியவை. சரித்திரம் வாசித்தவர்களுக்கு இதன் உண்மை விளங்கும். பிற தேசங்களின் நாகரிகமும் கலைஞானமும் சிறந்தவையாக இருந்தால்—அவைகளில் சிறந்த அம்சங்கள் இருப்பின்—அவைகளை நாம் ஏற்றுக் கடைப்பிடிப்பதில் தாழ்ச்சியொன்றுமில்லை. அது போன்றே, நம் நாகரிகம், கலைஞானங்களைப் பிறநாட்டார் கடைப் பிடிக்கலாம். அதனால் நமக்கொன்றும் குறைவேற்படாது. 'பற்பல தேசத்தினரின், பற்பல வகுப்பினரின் நாகரிகமும் கலைஞானமும் பெருகுவதற்காகப் பல பாகங்களிலுள்ள பல பிரிவினரும் கலப்பு விவாகஞ் செய்துகொள்ள வேண்டும். இதனால் சாதி சமய வேற்றுமைகள் ஒழிந்து ஒரே மனித குலமாக மக்கள் ஒன்றுபடுவர்' என்ற உயரிய எண்ணம் தற்போது நம் நாட்டில் பரவிவருகிறது. இந்நிலையில் நாம் நம் தமிழ் நாகரிகம், கலைஞானங்கள் எவ்விதக் கலப்புமின்றித் தனியாக இருக்க வேண்டுமென்று பெட்டியில் போட்டு பூட்டி வைக்க நினைப்பது அறிவுடைமையாகுமா? நாட்டு

நலனுக்கு உகந்ததாகுமா? என்று யோசிக்க வேண்டும்.

அதை விட்டு, 'தமிழர்கள் தனித்த ஒரு சமூகம் என்று கூறுவது தப்பா? தமிழ் நாகரிகம் கலை ஞானங்களுக்கு ஆபத்து நேராதவாறு பாதுகாக்கக் கிளர்ச்சி செய்வது தவறு?' என்று கேட்டு விடுவது மட்டும், தாய் நாட்டுப் பற்றை காட்டுவதாகாது. தனித்த சமூகமாகத் தமிழர்கள் எப்படியிருக்க முடியும்? மலைகளிலும் குகைகளிலும் அநாகரிக நிலையில் மக்கள் வாழ்ந்துவந்த காலத்தில், அவர்கள் ஒருவரோடொருவர் கலக்காது தனித்தனியாக வாழ்வது சாத்தியமா யிருக்குமே யொழிய, நாகரிகமும் அறிவும் முதிர்ந்து உலகின் பல பாகங்களிலு முள்ள மக்கள் ஒருவரோ டொருவர் அளவளாவுவதற்கும், போக்கு வரவுக்கும் சாதன மேற்பட்டுள்ள இவ் விருபதாம் நூற்றுண்டிலும்—கூட்டுறவு வாழ்க்கை சிறக்க வேண்டுமென்று கூறு மிக்காலத்திலும்—தனித்து வாழ்வது என்பது சிறிதும் சாத்தியமாகாது. கால மாறுபாட்டைக் கவனிக்கும்படி நாம் கேட்டுக்கொள்கிறேம். தமிழ் நாடு உலகத்திலிருந்து பிரிந்திருக்கவில்லை. உலக நிலைமை இந்தியாவைப் பாதித்து வருவதுபோல், தமிழ் நாட்டையும்

பாதித்தே வருகிறது. அதுபோன்றே தமிழ்நாட்டு நிலைமையும் உலகைப் பாதித்து வருகிறதென்றே கூறவேண்டும். ஆகவே, நாம் தனித்திருந்தால் மட்டும் உலக நிலைமை நம்மைப் பாதியாமலிருக்குமென நாம் இன்னும் நம்ப முடியுமா?

ஆகவே, நாமனைவரும் நம்மிடையேயுள்ள பேதத்தை யெல்லாம் மறந்து வரப்போகும் சுதந்திரப் போராட்டத்துக்குத் தயாரர்கவேண்டும். இந்தியா ஜீவித்திருந்தால் தமிழர்களாகிய நாமும் ஜீவித்திருப்போம். அது இறந்தால் நாமும் இறப்போம். தேச விடுதலைப் போராட்டம் ஏற்படுகையில் நாம் எல்லாவற்றையும் துறந்து அதில் சேரவேண்டும். கால தேச வர்த்தமானத்தை யுணர்ந்து நடவாது கிணற்றுத் தவளையாகவே இருக்க விரும்பினோமானால், கூடிய சீக்கிரம் அழிந்துபோவோம். நம் நாடும், நாமும் உயர்வடையக்கூடிய வழியில் நாம் சேவை செய்யாது வர்ளா இருப்போமானால் தமிழ் நாட்டின் எதிர்கால மக்களாகிய நமது சந்ததியார், பிற்காலத்தில், நம்மைச் சபிப்பார்கள். 'அர்த்தமற்ற ஆரியர், தமிழர், பிறர் என்ற சாதி சமய வேற்றுமை பேசி, மொழிச் சண்டையிட்டு, நாட்டையும் சமூகத்தையும் மொழியையுங்

கெடுத்து, நம்மை என்றென்றும் அடிமை மக்களாய் வாழவைத்தார்களே; அவர்களது அறியாமையையும் குறுகிய மனப்பான்மையையும் என்னென்பது?' என்றே பழிப்பார்கள். அவ்விதப் பழிக்கும் பாவத்துக்கும் நீங்கள் ஆளாகப்போகிறீர்களா? எதிர் காலத்தில், எல்லா தேசங்களும் சமூகங்களும் உன்னத நிலை யடைந்திருக்க, நம் வருங்கால மக்கள் அடிமை நாட்டில் கேவல நிலையில் வாழ—'தமிழ் நாட்டுத் தமிழ் மக்கள்' என்று கூறவும் வெட்கி நிற்கும்படியாகச் செய்யப் போகிறீர்களா? என்றே கேட்க விரும்புகிறோம்.

முடிவாக, ஸர். பன்னீர்செல்வம் கிளப்பியிருக்கும் 'தமிழர் யார்?' என்ற வினாவுக்கு நாம் என்ன பதில் கூற விரும்புகிறோமென்றால், தற்போது தமிழ் நாட்டில் வதியும் மக்களெல்லாம்—தொன்றுதொட்டு இத் தென் தமிழ் நாட்டைத் தாய் நாடாகக் கொண்டுள்ள தமிழர்கள், எக் காரணத்தாலோ அவ்வக்காலத்தில் இங்கு குடியேறி, இதையே தாயகமாகக் கொண்டுவிட்ட கிறிஸ்தவர், முஸ்லிம்கள் முதலியோர் அனைவரும் தமிழர்களேயாவர் என்பதாம். இன்னும் விளக்கமாகக் கூறவேண்டுமானால், நம் தமிழ் மொழியைத் தாய் மொழியாகவும் தமிழ் நாட்டைத் தாய்

**நாடாகவுங் கொள்ள விரும்புவோர் யாவராயினும்—அவர்கள் ஐரோப்பியராயினும்—அவர்களை யெல்லாம் நாம் தமிழர்க ளென்றே—நம் சகோதரர்களென்றே ஏற்றுக்கொள்வோம்.**

நம் தமிழ் மொழி வளர்ச்சி பெறவேண்டுமானால்—நம் தமிழ் சமுதாயம் உன்னத நிலையில் வாழவேண்டுமானால்—நல் தமிழ் நாடு உயர்வு பெறவேண்டுமானால்—நம்மிடையேயுள்ள மூடப் பழக்க வழக்கங்களும், உயர்வு தாழ்வு முதலிய அர்த்தமற்ற வேற்றுமைகளும் குறைபாடுகளும் ஒழியவேண்டுமானால்—தமிழ் மக்களாகிய நாம் அனைவரும், சமூக, சமய, அரசியல் முதலியவைகளில் சமத்துவமும் உரிமையும் பெற்று யாதொரு குறைவுமின்றி வாழ்க்கையில் இன்ப மனுபவிக்க வேண்டுமானால், இவற்றிற்கெல்லாம் அருமருந்தாக உள்ளது: சமத்துவம், சகோதரத்துவம் சுதந்திரம் ஆகியவற்றை அளிக்கவல்ல சமதர்மமேயாகும். ஆகவே, அத்தகைய உயரிய தத்துவத்தை அடைய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபடுவோமாக! சமதர்மமே மனித ஜீவாபிமானத்தையும் உலக ஐக்கியத்தையும் உண்டுபண்ணும்.

மனித சமூகமே ஒரு பெரிய குடும்பம் என்ற

மனோபாவத்தை உண்டாக்கினால்தான் தமிழ் நாடு மட்டுமல்ல; உலகமே உயர்வடையும்.

ஆதலால் தமிழ் நாட்டுச் சகோதர சகோதரி களே! தமிழ் மொழி வாழ, தமிழ் மக்கள் வாழ, தமிழ் நாடு வாழ ஒவ்வொருவரும் சேவை செய்ய வேண்டும். தமிழ் மொழி முன்னேற்றத்தால் தமிழர் முன்னேற்றமும், தமிழர் முன்னேற்றத் தால் தமிழ் நாட்டு முன்னேற்றமும், தமிழ் நாட் டின் முன்னேற்றத்தால் இந்தியாவின் முன்னேற் றமும், இந்தியாவின் முன்னேற்றத்தால் கீழ் நாடு களின் முன்னேற்றமும் ஏற்பட இன்றிருந்தே பாடுபட முன்வருவீர்களாக!

" எல்லாரும் ஓர் குலம்—எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர் நிறை—எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்."

—பாரதி

...va Nesan Press, Printers, Broadway, Madras.